உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சென்னை இந்து விநோத சபா

ம-ா-ா-ஸ்ரீ, கே. சீனிவாசப்பிள்ளை கம்பெனியாராலும்,

ஸ்ரீகிருஷ்ண விநோத சபா

ம-ா-ா-ஸ்ரீ, ஸி. கன்னையா கம்பெனியாராலும்,

ஒவ்வோரு தேசங்களிலும் நடத்தி

நற்புகழ்ச்சி பெற்றுவரும்.

10 DEC [illegible]
1440

நந்தனர்

சரித்திரம் (டிராமா)

மது[illegible]மா நகரம்.

கவிராஜ-கந்தசா[illegible]பிள்ளை அவர்களால்

[illegible]யற்றப்பட்டு,

பாரதி-கோபாலகிருஷ்ணய்யரால்

பழைமையா எழுதியிருந்த சில கீர்த்தனைகளும் சேர்[illegible]

ஒவ்வொரு சீன்களின் ஆக்டைப்போல திருவ[illegible]

சென்[illegible]

மூர[illegible]

உ

கடவுள் துணை.

நந்தனார் சரித்திரம் (டிராமா)

ரிஜிஸ்டர் அறிவிப்பு

புத்தக வியாபாரிகளுக்கும் மற்ற யாவருக்கும் தெரி விக்கும் அறிவிப்பு யென்னவென்றால்:—

மேற்படி நந்தனார் சரித்திரமென்னும் டிராமா புத்த கத்தை சகல நாடக கம்பெனிகாரர்களும் நடத்திவருவது போல் கவிராஜ-கந்தசாமி பிள்ளை அவர்களால் தொகுக் கப்பெற்று அச்சிட்டிருக்கிறோம். இதிலுள்ள பாட்டுகள், சனங்கள், மாற்றியாவது இதே டிராமா புத்தகத்தையா து அச்சிடாதபடி கவர்ன்மெண்டார் ஆக்ட்படிக்கு ரிஜிஸ் டர் செய்யப்பட்டுள்ளது.

இதை என் அனுமதியின்றி அச்சிட லாகாதென யவும்.

இப்படிக்கு,

முரஹரி அச்சுக்கூடத் தலைவர்,

செல்வராய நாயுடு

உ

...ம. திருச்சிற்றம்பலம்.

நந்தனார் சரித்திரம்

(டிராமா.)

கணேசர் துதி.

விருத்தம்.

அந்தரி கௌரிபுத்ரா ஆதிவிக் னேஸதேவா
நந்தனார் சரித்திரத்தை நானிலத்தோர்களுக்கு
சிந்தையில் பதியும்வாறு சிந்தித்து எழுதுகின்றேன்
எந்தனுக்கருள் வாயையா என்குரு கணேஸா போற்றி.

கணபதி தரு.

இராகம் (கருணிஞ்சரா) என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

வரமருள்வாய் கணநாயகா
தரணியிலுந்தன் அருள்தாயகா வரம

அநுபல்லவி.

பரனருள்பாலா பக்...
பணிந்தேனுந்தன்

சரணங்கள்.

அம்பிகைபுத்ரா அன்பர்கள்மித்ரா
உம்பர்கள் தோத்ரா ஓங்கார காத்ரா வர
வித்யாவினோதா விண்ணோர்கள்பூஜிதா
சித்திவிநாயகனே சிந்தித்தேனேயானே வரட
நந்தன் சரித்திரம் நலமாயெழுத
கந்தசாமிக்கருள் சுந்தரகணேஸா வர

சரஸ்வதி விருத்தம்.

அன்பர்கள் மனதில்நாளும் அமர்ந்தநல் லமுதேஞானம்
நன்மையா யுபதேசிக்கும் நான்முகன் தேவியாகி
வன்மைசேர் வீணையேந்தும் வாணியே யுந்தன்பாதம்
பன்முறை துதித்தேனம்மா பக்ஷமாய் துணைசெய்வாயே.

தரு இராகம் கமாஸ்-அடதாளம்.

பல்லவி.

வாணி சரஸ்வதி வந்தென் வாக்கிலிருப்பாய்—கையில்
வர்னத் தம்பூரணிந்து வானோர்க் கருள்புரியும்

அநுபல்லவி.

காணுதற் கரியகலை வாணியே நித்யகல்யாணி
பூணுஞ் சங்கீதவேணி பூசுரர்புகழ் தியானி

சரணங்கள்.

சுத்த வைராக்யமுள்ள சூழ்புவியோர்க் கருள்செயும்
வித்யானந்த விவேகி வேதாந்த பாராயணி
நித்யானந்த சரஸ்வதி நினைத்தோர்க் கருள்நிதி
பத்தியுட னுன்னிரண்டு பாதத்தையான் நம்பினேனே

சபையோர் வணக்கம்.

விருத்தம்.

இலக்கண இலக்கியங்கள் இசைநத சங்கீதஞானம்
பலபலநூ லுணர்ந்து பாடும்நற் கவிஞர்முன்னே
நலமுறும் நந்தனாரின் நற்சரித் திரத்தையானும்
[illegible] மகிழ்வதாக தன்மையாய் எழுதினேனே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நந்தனார் சரித்திரம்

(டிராமா.)

1-வது ஆக்ட்

1-வது—ஸீன்.



[இடம்—திருப்பன்கூர் ஸ்தலம்—சிவஸ்தலம்]

சிவனடியார்—நந்தனார்

சிவபஜனை தரு.

இராகம்-தன்யாசி-ஆதிதாளம்.

பல்லவி.

சிவபஜனைபுரிந்து ஜென்மசாபல்யமாவீர்

சிவநேயச் செல்வர்களே சிவ

அநுபல்லவி.

தவமுனி சித்தர்களும் தரணியின் பக்தர்களும்
பவபந்த மொழித்தயன் பாதத்தை நாடியதால் சிவ

சரணங்கள்.

காமக்ரோதலோபத்தை கருத்தில் நினையாமல்
கருணாகரனைத்துதித்தால் சதாகாலமும் எமபாதையில்லாமல்
என்னாளும் சாயுஜ்யம் எய்தி சுகமடைவீர்
தாமதஞ் செய்திடாமல் தரணியிலிருப்போரே
தானதர்மம் புரிந்து தற்பரனருள்புரிவீர்" சிவ

வசனம்.

அன்பர்காள்! யாம் உலகிற் பிறந்து உண்பதும், உடுத்துவதும், உறங்குவதுமாகவேயிருந்து காலங் கழித்துக்கொண்டிருந்து ஆயுள் முடிவில் அந்தகன் தூதரால் ஆபத்தணுகி ஆவிபிழப்பதற்குமுன் சிவபஜனை செய்து தீவினையை ஒழித்து ஞானானந்தமாயிருப்பதுவே மேலான மார்க்கமாகும். [சிவபக்தர்கள் போகிறார்கள்.]

[நந்தன் எட்ட நின்று துதிப்பது.]

நந்தனார் விருத்தம்.

மனிதராய் பிறந்தோரெல்லாம் மாநிலந்தனி லிவ்வாராய்
கனிவுடன் சிவன்நாமத்தைக் கருத்தினில் நினைந்தெந்நாளும்
இனிதாக பஜனைசெய்து இகபர சுகத்தைத்தேடி
தனிமையா யிருந்துயோகம் தான்செய்யும் நிலையிதானே.

வசனம்.

சிவ! சிவா!! இத்தனை நாளாய் நித்திரையிலிருப்பவன் கண் மூடித்தனமாய் உலக இன்பத்தைக் கவனியாமல் கண்ணை மூடிக் கொண்டிருந்த விதமாக நாம் மனிதனாகப் பிறந்தும் நம்மைச் சிருஷ் டித்துக் காப்பாற்றும் ஜீவரக்ஷகனாகிய சிவபெருமானைக் கவனியாம லிருந்தோம், இனிமேலாவது நாம் சிவபஜனை செய்யும் மார்க்கத்திற் பிரவேசித்து சாயுஜ்ஜியபத மடைகுவோம்.

நந்தனார் தரு.

இராகம் (அரனே கேங்காதரனே) என்ற வர்னமெட்டு.

சிவனே அருள் பரனே—மாய
பவமே யொழிப்பாயே

தவமேபுரிந்
தன்பாய்
பக்தர்க்கருள்
பாதமருள்
இத்ததியெந்தன்
இருப்பாய்
அல்லும் பக
அன்பாய்
தொல்லைவினை
தோத்திரஞ்

துணையேமதித்
துதிப்பேனே சிவனே
மித்ரா—யுந்தன்
வாயே
மனதில்
சிவ சிவமே சிவனே
னுன்னை—யானே
பூஜிப்பேனே
நீங்கிடவே
செய்தேனே சிவனே

வசனம்.

சிவ! சிவா! ஜெகதீஸ்வரா? யான் உலகிற் சைவ சமயாசாரத்தில் சிறந்த சிவனடியாருடன் சேர்ந்து உன்னை பூஜிப்பதற்கின்றி தீண்டப்படாத பறையனுய்ப்பிறந்து புலையர்களுடன்சேர்ந்து புலால் நாற்றம் வீசும் சேரியில் அடிமையாளனுயிருந்து, ஏருழுவதும், நாற்று நடுவதும், ஏற்ற மிறைப்பதும் தான் உலகிர் பிறந்த பலனென கலங்கி நிற்கின்றேனே; எனக்கு உனது கடைக்கண் பார்வையால் ஞானவழி காண்பிக்கலாகாதா; கர்த்தவ்யமே!

தேவாரம்.

ஆதியா யனாதியாகி
யருமறைப் பொருளுமாகி
ஜோதியா யெங்குந்தோன்றி
சுடரொளி விளக்குமாகி
பாதிமா மதியணிந்த
பரமனே கைலைவாழ்வே
நீதியேயென துள்ளத்தில்
நின்றருள் செய்வாய்போற்றி.

வ ச ன ம்

சிவ! சிவா! கைலைவாசா! சகல உயிர்கட்கும் ஆதாரமாய் எள்ளுக்கு ளெண்ணெய்போல் நிறைந்து சகல ஜீவாத்மாவும் சந்ததம் சிவானுக்கிரகமாய் ஜீவிப்பதற்காக அனுக்கிரகஞ் செய்யும் ஐயனே! மெய்யனே! அடியேனையும் உமது பக்தனைகச் செய்து காப்பாற்ற வேண்டும் தயாநிதி! [நந்தன் போகிறுன்.]

2-வது—சீன்

[இடம்—பறைச்சேரி]

கதாநாயகர். நந்தன், பறையர்கள், பறைச்சிகள்.

பறையர்கள் தெம்மாங்கு.

அந்திபகல் சந்தியிலும்
ஆனந்தமாய் கள்குடித்து
சிந்துபாடி கூத்தாடுவோம்
வந்திடுவீர் சீக்கிரமாய்
கூடிவிளை யாடிடுவோம்
பாடிமனம் மகிழ்ந்திடுவோம்

கள்ளுக்குடித் திடுவோம்
கைகோர்த்து ஆடிடுவோம்
கள்ளுதுபார் போதையாலே
தரையில்விழுந் துருண்டிடவே
கூடிவிளையாடிடுவோம்
பாடிமனம் மகிழ்ந்திடுவோம்

வீரன்கருப் பனுக்கும்
வேணபடி பூஜைசெய்து
சாராயம் குடித்துவிட்டு
சந்தோஷமாகப் பாடுவோம்

கூடிவிளை யாடிடுவோம்
பாடிமன மகிழ்ந்திடுவோம்

[நந்தன் வருகிருர்.]

நந்தன் விருத்தம்

அன்பரே, தோழமாரே! அனுதினம் கள்குடித்து
துன்பமென் றுணர்ந்திடாமல் துடிதுடித் தெகிரிவீழ்ந்து
இன்பமென் றெந்தநாளும் இவ்வித மலைந்துநின்றால்
நன்மையை யடைவதென்றே நவிலுவீர் அறிவுள்ளோரே!

வசனம்

எனது அன்பார்ந்த தோழர்களே! மனிதர்களாய்ப் பிறந்ததினுல் பிரயோசனமென்ன? இவ்விதமாய் ஆடிப்பாடிக் குதித்துக் கூச்சலிட்டுக் கத்திக்கொண் டிருந்தால் நாம் நல்வழி நாடுவது எப்படி? ஆகையால் நீங்கள் இனிமேலாகிலும் அஞ்ஞான மார்க்கத்தை விடுத்து மெய்யான மார்க்கத்தை யனுசரித்து ஞானனந்தமா யிருந்தால் இகத்தில் கீர்த்தியும் பரத்தில் மோக்ஷ சாம்ராஜ்யமும் பெற்று சுகஜீவிகளா யிருப்போம்.

குப்பன் விருத்தம்

இவ்விதமாக யாமும் இனிமையாய் கள்குடித்து
அவ்விய மில்லாமற்றான் ஆடியே பாடிக்கொண்டு
செவ்வையா யிருக்கின்றோமே சேரியி லிதற்குமேலே
எவ்வித சுகந்தானுண்டோ எங்களுக்குச் சொல்வாயே.

வசனம்

அடே நந்தா! நீ செல்றது கேக்க கேக்க ஆச்சரியமா யிருக்கிதே; நம்பசேரிலேதான் கள்ளுசாராயங் குடித்துவிட்டு ஆடுறோம், பாடுறோம், விளாடுறோம், இன்னம் என்னமாயிருந்தாக்கா இதுக்குமேலே நல்ல சுகங்கிடைக்குமடா?

நந்தன் விருத்தம்

அன்புடன் ஆற்றிற்கேகி அரஹரா! சிவனே! யென்று
இன்புடன் ஸ்நானஞ்செய்து இருதய சுத்தியோடு
தன்மையா விபூதிபூசி தலையில் ருத்ராக்ஷமாலை
நன்மையா யணிந்தேசிவனை நாடியே பாடுவீரே.

வசனம்

அப்பா! அன்பர்களே, தினந்தோறும் ஆற்றில்ஸ்நானஞ்செய்து வஸ்திரத்தைச் சுத்தமாய் தவைத்து சரீரத்தைத் துடைத்து நெற்றியிலும், மார்பிலும், தோளிலும் விபூதியணிந்து, ருத்திராக்ஷமாலையை கழுத்திலும், சிரசிலும் சூடி மதுமாம்ஸபக்ஷணத்தை வெறுத்து சுத்தமாய் சமைத்த அன்னபதார்த்தங்களை புசித்து ஆனந்தமாய் அரஹரா! சிவ சிவா! வென்று பக்திபண்ணிக்கொண் டிருந்தால் பரமசிவம் நமக்கு சதாகாலமும் சுகானந்தமா யிருப்பதற்கான நல்வழி காண்பிப்பார்.

தடியன் வசனம்

அதென்ன சாமிடா! அந்தசாமி; எங்கே யிருக்குது காட்டு பார்க்கலாம்.

நந்தன் வசனம்

அடே! அது அமரர் சித்தர் முனிவர்களாலும் புகழ்ந்து பேசும் படியான ஜோதி மயமானது, நீங்கள் என்னுடனே வருவீர்களானால் காண்பிக்கின்றேன்.

[நந்தனாருடன் பதினொரு பறையர்கள்
சிவாலயதரிசனங் காணப்போவது.]

நந்தனார் தரு.

இராகம்-செஞ்சுருட்டி, ரூபகதாளம்.

சிவலோகநாதனைக்கண்டு சேவித்திடுவோம்வாரீர்

அநுபல்லவி

பவபந்தங்களைப் போக்கி—அவர்
பரமபதத்தைக் கொடுப்பாரந்த சிவ

சரணங்கள்

அற்பசுகத்தை நினைந்தோம் அரன்திருவடிமறந்தோம்
கற்பிதமான பிரபஞ்சமீது கானல்ஜலம்போலேயெண்ணி சிவ

ஆசைக்கடலி லிருந்தோமினி அறிவுக்கறிவைபுகழ்ந்தோம்
பாசமகலவழி தேடாமல் பரதவிக்கும்பாவியானேம் சிவ

மானிடஜன்மங் கொடுத்தார்தன்னை வருந்தக்காங்களளித்தார்
தேனும்பாலும் போலேசென்று தேரடியில்நின்றுகொண்டு சிவ

வசனம்

அன்பர்களே! நாம் வெகுதூரம் வந்தோம் இன்னும் கொஞ்ச தூரந்தா னிருக்கின்றது சிவபெருமான் ஆலயம், நாம் அங்குசென்ருல் தூரத்திலிருந்துதான் பார்க்கவேண்டும். அதேனென்ருல்அங்கு அநேகம் பிராமணர்களும், சைவர்களும் வந்திருப்பாகள், நாம அங்கு சென்ருல் நமது கடவுளாகிய சிவபெருமான் தரிசனங்கண்டு மனமகிழலாம்.

பறையர்கள் வசனம்

சரி! அப்படியானுல் நாமெல்லாம் போய் வேடிக்கை பார்த்து விட்டு வருவோம்.

குடியன் தரு.

(எழுந்தேன்னுடன் வாரும்) என்ற வர்னமெட்டு

பாப்பாரக் கோவிலுக் கேன் போகின்றீர்

நந்தனர்

பக்தியுண் டாகுமதனுல் முத்திபெறலாம் வருவீர்

குடியன்

பக்தியாய்க் காத்தான் சின்னுனைக் கும்பிடுவோம்

நந்தனர்

பரமபதங் காணி யாகூறி யுண்டாமே

முரடன்

பலநாளுங் காணியாக்ஷி சேரி தானே

நந்தனார்

பறையரே நன் மார்க்கந்தனை நாடுவீரே

மூர்க்கன்

புதிய வழக்கஞ் செய்தால்
பிழைப்புக் கிடர்வரும் போகாதீர் போகாதீர்

நந்தனார்

வந்திடும் வந்திடும் கந்தசாமிக் கருள்
பரமசிவனைக் காண வந்திடும் வந்திடும் பாப்

வசனம்

அடே அறிவில்லாத பறையர்களே! உமக்கென்ன கொஞ்சமும் மதியில்லையா? நாம் உலகில் மனிதராய்ப் பிறந்தபோதே அடக்கம், பொறுமை, சாந்தம், தயாளம் ஜீவகாருண்ய மென்னும் நற்குணங்களை துணைவகித்து அஞ்ஞானமாய் கையிலிருந்து விலகி மெய்ஞ்ஞானமென்னுங் கரையிலேறி மோக்ஷமென்னும் காணியாக்ஷி யடைந்தால் தானே நன்மையாகும், நீங்கள் இன்றையதினம் மாத்திரம் என்னுடன் வாருங்கள், சிவதரிசனத்தைப் பாருங்கள், அச்சமயம் உங்களுக்கு உண்மை ரகஸ்யம் ஒழுங்காய் தெரியும், வருவீர்கள்.

பறையர்கள் வசனம்

அடே நந்தா! நீதான் பைத்தியக்காரன் நாங்களெல்லாம்தொழிலைவிட்டு உன்னுடன் தொடர்ந்துவருவோமோ போடா போடா, பைத்தியக்காரா!

[நந்தன் தனது சொற்படி சம்மதித்த
பதினொரு பறையருடன் சிவதரி
சனங் காணப்போகின்றார்.]

3-வது—சீன்



[க்ஷேத்திரம்—திருப்பன்கூர்]

[இடம்—சிவாலயம்]

கதாநாயகர்.

நந்தனர்—பறையர்கள்.

[பிராமணர்கள் சிவாலயத்திலே அர்ச்சனை செய்து பூஜித்துக்கொண்டிருப்பதை நந்தனாரும் பறையர்களும் பார்த்து தூரத்தில் நின்று ஸ்தோத்திரம் செய்வது.]

நந்தனர் விருத்தம்

அன்பான தோழமாரே அந்தணர் கூட்டத்தோர்கள்
சின்மயானந்த ஜோதி சிவசிவா வென்றுசொல்லி
இன்பமாய் பூஜிக்கின்ருர் இனியேனும் நீங்களெல்லாம்
நன்மையாய் சிவத்தியானம் நலமுடன் புரிகுவீரே.

வசனம்

அன்பர்காள்! இதோ பாருங்கள், சைவப் பிராமணர்கள் ஸ்நான

பான நேமநிஷ்டை புரிந்துவந்து ஞானானந்தமார்க்கமாய், சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்து நறுமணம்வீசும் மணமலர்களால் சாத்துபடி செய்து கர்ப்பூர தூபதீபாராதனை செய்கின்றார்கள். இதோ கவனித்தீரா! அரஹரா! சிவ சிவா! வென்ற சப்தம் என்ன ஆனந்தமா யிருக்கின்றது பாருங்கள்.

பறையர்கள் விருத்தம்

நந்தனேஉன் சொற்போலே நாங்கள் பன்னொன்றுபேரும்
வந்துகோவிலையுங் கண்டோம் வழியில் கல்மாடுங்கண்டோம்
அந்தணர்பூஜை கண்டோம் அந்நாள்நீ சொன்னசாமி
எந்தமாதிரி யிருக்கும் எங்கள்முன் காண்பிப்பாயே.

வசனம்

அடே நந்தா! நீ சேரியில் சொன்னசொல் மெய்தாண்டா! ஆனால், நாங்கள் பதினொருபேரும் வந்து இந்த கோவிலை பார்த்தோம், நல்ல அழகாகத்தா னிருக்குது. அதென்னடா இவ்வளவு பெரிய கல்மாடு படுத்துக்கொண் டிருக்குது, என்னடா! எங்குபார்த்தாலும் வெளிச்சமாய் கோவிலுக்குள்ளே எத்தனையோ விளக்கு வற்றிவைத் திருக்கின்றார்களே! அப்பப்பா! இதுவும் நல்ல வேடிக்கைதான் அந்தப் பாப்பாருங்கோ கையிலே அவ்வளவு விளக்குகளையும் எடுத்துக்கொண்டு சுழற்றுங்கோ அதுவும் நல்ல வேடிக்கைதான் ஆனால் நீ சேரியில் சொன்னாயே பரமசிவசாமி யிருக்குது என்று அதென்ன சாமிடா? அந்தசாமி எங்கே யிருக்குது காண்பிப்பாய்.

நந்தனார் வசனம்

சிவ சிவா! யான் இந்த பறையர்களுக்கு உனது பாத தரிசனங் காண்பிக்க அழைத்து வந்தும், என் வார்த்தையை பொய்யாக்குவதற்கு இந்த மாடுவழியில் குறுக்கே படுத்துக்கொண்டு வழி மறைத்திருக்கிறதே இதற்கென்ன செய்வேன் பரமேஸ்வரா?

நந்தனார் தரு.

இராகம்-தேசிகதோடி, தாளம்-ஆதி.

பல்லவி.

வழிமறைந்திருக்குதே—மலைபோலே ஒரு
மாடுபடுத் திருக்குதே

அநுபல்லவி.

அழிவிலாத ஞான ஆனந்தரூபனே
ஐயனே மெய்யனே தூய்யா நின்னெதிரில் வழி

சரணங்கள்.

பாவிப் பறையனிந்த ஆரில்வந்துமிலண்
பாவந் தீரேனோ—உந்தன்
பாதத்திற் சேரேனோ
ஏறேனோ சிவ லோகநாதா—மாடு வழி

தேரடியில் நின்று தெரிசித்தாலும் போதும்
கோவில்வர மாட்டேன்—ஐயே
ஓரடிவிலகினல் போதுமங்கேநின்று
உற்றுப்பார்க்கச் சற்றே விலகாதோ—மாடு வழி

வசனம்.

பரமசிவமே! சகல மனிதர்களையும் தாங்களே சிருஷ்டித்தீர், பிராமணர்கள் மாத்திரம் உமக்குச் சொந்தமா? அவர்கள் அருகிலிருந்து பூஜித்தாலும், யாங்கள் தேரடியில் நின்றுவது உமது பாத தரிசனங்கண்டு பூஜிப்போமென்றாலும் இதென்ன வழியில் ஒரு மாடு மலைபோலே படுத்திருக்கின்றதே பரமசிவமே.

[ஈஸ்வரன் ரிஷபாரூடராய் ஆகாயமார்க்கமாய் வந்து நந்திதேவருக்குசொல்வது.]

பரமசிவன் தரு

இராகம்-துக்கடா தாளம்-ரூபகம்

ஒருநாளும் வாராத பக்தன்
திருநாளைப் போவாரெனுஞ் சித்தன்
ஓதுங்காமலிருந்தது உன்மீதுகுற்றம் ஒரு

வசனம்

சிவபக்த சிரோன்மணியே! தேவர்கள் புகழும் நந்தியே இந்த சமயம் நீ.

பரமசிவன் தரு

இராகம்-அங்குசதொனி தாளம்-ரூபகம்

பல்லவி

சற்றேவிலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குதாம்

அநுபல்லவி.

நற்றவம்புரியும்	நம்மிடதிரு
நாளைப்போவார்	வந்திருக்கிறார் சற்

சரணங்கள்.

சாதிமுறைமைப்	பேசுமுன்
தன்னை இகழ்ந்து	யேசுமுன்
கோதிலாத	குணமுடையோன்
கோபங்கொண்டால்	தாளமாட்டோம் சற்
வேதகுலத்தைப்	போற்றுமுன்
விரும்பிவிரும்பி	ஏற்றுமுன்
பூதலத்தி	லிவனைப்போல
புண்ணியபுருஷ	னெவனுமில்லை சற்
பத்தியில்	கரைகண்டவன்
பார்த்துபார்த்து	உண்டவன்
சித்தங்கலங்கில்	நமதுசெல்வம்
முற்றுங்குறையும்	தபவுசெய்து சற்

[சிவானுக்கிரகத்தினால் நந்திதேவர் விலகி திரும்பியிருக்கவும், சுவாமி தரிசனங் கிடைக்கதென்று நந்தனார் பாடுவது.]

நந்தனார் வசனம்

அன்பர்காள்! அதோ பார்த்திரா, இவர்தான் சிவபெருமான், என்ன அழகுடைய முகவஜீகர சிங்காரமா யிருக்கின்றார். இனி கால தாமதஞ் செய்யாமல் நமது இரண்டு கரங்களையும் சிரசின்மீது குவித்து ஸ்துதிபுரிவோம்.

பறையர்கள் வசனம்

அப்படியே செய்வோம் சுவாமி! எங்களுக்கெல்லாம் துணையா யிருக்கவேணும் பரமசிவமே!

நந்தனார் தரு.

இராகம்-கலியாணி, அடதாளம்

பல்லவி.

தரிசனஞ்	செய்வோமே—சிவன்பாத
தரிசனஞ்	செய்வோமே

அநுபல்லவி.

தரிசனஞ்செய்வோம் பரமனைப்பணிந்து
வரிசையுடன்சிவம் வாழிவாழியென்று தரி

சரணங்கள்.

குதித்துக்குதித்துக் கும்பிடுபோட்டுத்
துதித்துநமதூழ்வினைத் துன்பங்கள்தீர தரி
போற்றிபோற்றியென்று பொன்னடிவணங்கி
பார்த்துபார்த்துபர மானந்தங்கொண்டு தரி
அச்சமறந்துஞான அறிவினாலுணர்ந்து
அரஹரசிவசிவ அம்பலவாணாயென்று தரி

தேவாரம்

ஆதியேஞான வேதமேமோன
ஐயனே கைலையீசனே
ஜோதியே சிவலோகநாதனே
தோத்திரஞ் செய்தோமுந்தனை
கோதிலாஞான மார்க்கந்தன்னையே
கோரினேந் தாரும்சந்ததம்
வேதியர்துதி ஞானதீபமே
வேண்டினோம் அருள்செய்வீரே.

வசனம்

ஜெகதீஸ்வரா! உம்பர்கள் பூஜிதா! சதாகாலமும் நின்பாத மே யாங்கள் கண்டு-மனமகிழ திருவருள்புரிந்து ஞானானந்த விளங்கும்படி அருள்செய்வீர்.

பறையர்கள் வசனம்

நந்தனாரே! உனது மகிமையைக் காணாத பறையர்களுடன் யாங் ளும் உன்னை அலக்ஷியமாய் மதித்து இகழ்ந்து பேசியதையெல்லாம் ன்னிக்கவேண்டும் சுவாமி!

நந்தனார் வசனம்

சுவாமிகாள்! யாவும் சிவன்செயலேயாகும், தங்களுக்குஞ்ஞான வைராக்கியம் பரமசிவன் தந்தருளியதும் சிவானுக்கிரகமே யாகும்.

பறையர்கள் வசனம்

சிவ! சிவ! சிவ! சிவ! சிவ! சிவ!

3

நந்தனார் வசனம்

பரமசிவமே! ஆலய திருக்குளத்தில் சைவ சமயாசார முடையவர்கள் தான் ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்து விபூதி ருத்திராக்ஷ மணிந்து உம்மை பூஜிப்பதாகும், பறையர்கள் ஸ்நானபானஞ் செய்வதற்கு திருக்குளம் வெட்டுவதற்கு சகாயம் செய்தருளவேணும் பரமேஸ்வரா!

[விநாயகர் திருக்குளம் வெட்டுவதற்கு
மனிதரூபமாய் வருவது.]

நந்தனார்—கட்டளைக்கலிப்பா.

மண்வெட்டி கடப்பாரையு மேந்தியே
மஹேஸ்வரன் போலென் முன்பாகவந்தனை
கண்யமாக அமைந்த சொரூபனே
கைலநாதனை பூஜிக்கும் வேளையில்
வண்மையாக ஸ்நானஞ் செய்வதற்காக
வழங்கும் நற்றடாக முண்டாக்கினால்
உண்மையாக நின்கூலியும் நான்தந்து
உந்தனை யென்நாளும் மறக்கேனே.

வசனம்

ஐயா! தாங்களென்மீது தயைபுரிந்து யாங்கள் சிவபூஜை செய்யும் வேளையில் ஸ்நானபானஞ் செய்வதற்காக ஓர் தடாக முண்டாக்கினால் உமக்குச் சேரவேண்டிய கூலியும் கொடுப்பேன் உமது சகாயத்தை சதாகாலமும் நினைத்துக்கொண் டிருப்பேன்.

விநாயகர் வசனம்:—அப்படியே செய்கின்றேன்.

நந்தனார் வசனம்

அன்பர்காள்! நாம் நமது சேரியில்போய் நமது வயற்காணிகளைப் பார்த்துவிட்டு நாளைக்கு வருவோம், சுவாமிகாள்!

பறையர்கள்:-அப்படியே போய்வருவோம நந்தஞ் சாமியா

[நந்தனார் சேரிக்குப்போய் மறுதினம் வருவ

விநாயகர் விருத்தம்.

நந்தனே உன்னிஷ்டம்போல் நானிந்த குளத்தைநல்ல
சுந்தர தடாகமாக சூழ்புவி யோர்கள்மெச்ச
அந்தமாய் வெட்டினேனுன் அதிர்ஷ்டம்போல் முடிந்ததையா
எந்தன்விட்டிற கேகின்றேன் எந்தனை யனுப்புவாயே.

வசனம்.

ஐயா! இதோ பார்த்தீரோ? உமது மனம்போல சிவனடியார்கள் ஸ்நானஞ்செய்து மனோல்லாசமாய் பகவத் பக்தியானந்தமாய் சிவ பூஜை செய்வதற்கு வசதியானதாய் நீராழி மண்டபமும் தயார்செய்துவிட்டேன், இனியான் எனது வாசஸ்தானத்திற்குப் போகின்றேன் செலவு தாரும்.

நந்தனார் வசனம்.

மகா சந்தோஷம் சுவாமிகாள்! தாங்கள் மஹா சமர்த்தர், இதோ உமக்கு பதக்குநெல் தருகிறேன் பெற்றுக்கொண்டு செல்வீரையா?

விநாயகர் வசனம்.

அப்பா! இந்த பதக்கு நெல்லை அரிசியாகச்செய்து சாதஞ்சமைத்து ஆனந்தமாய் புசித்து அனுதினமும் என்னை நினைந்துக்கொண்டிருப்பாய்.

நந்தனார் வசனம்.

அப்படியே மஹா பாக்கியம்! சற்குணமுள்ள தருமவானே.

[நந்தனார் சிநேகிதராகிய பதினொருபேரும் வருதல்.]

பறையர்கள் வசனம்:—நமஸ்காரம் நந்தன்சாமி!

நந்தனார் வசனம்:—சுவாமிகாள்! நமஸ்காரம்.

[நந்தனார் தன்னுடனிருக்கும் பதினொரு பறையர்களுடன் தடாகத்தில் ஸ்நானபானஞ் செய்து விபூதி ருத்திராக்ஷ மணிந்துக்கொண்டு வருவது.]

பதினொன்று பறையர்களுடன் நந்தனார் நாமாவளி பாடிக்கொண்டு வருவது.

சிவ சிவ சிவ சிவ சிதம்பரநாதா
சிவ சங்கர சிவ சின்மயானந்தா — சிவ

தவசிகள் தொழுதிடும் தற்பரானந்த
தயாபரா கைலையில் தானமர்ந்தவனே — சிவ

அமரர்கள் பூஜித ஆதிவேதாந்தா
ஆத்ம நாதனனை ஹாஹாசிவசிவ — சிவ

உமையவள் பாகா உம்பர்கள்பூஜிதா
தமதருள் பெறவருள் சாம்பசதாசிவா — சிவ

[பாடிக்கொண்டே தமது சேரிக்குப் போகிறார்.]

2-வது ஆக்ட்

1-வது—ஸீன்.



[இடம்—பறைச்சேரி, தோட்டம்]

கதாநாயகர், நந்தனார், பறையர்கள்.

[நந்தனார் பதினொரு பறையர்களுடன் பாடிக்கொண்டு வருவது.]

நந்தனார்—நாமாவளி.

அஹா சிவசிவ அம்பலவாணா
தரணியிலெங்களை காத்தருள்வோனே அர

ஆரவாபரணா அம்பிகைபாகா
அமரர்முனிவர்துதி ஆனந்தரூபா அர

கைலையிலமர்ந்த காருண்யசேகரா
கந்தசாமிக்கருள் சந்த்ரஜடாதரா அர

[பறையர்கள் வேடிக்கை பார்ப்பதும், நந்தனார் பாடிக்கொண்டு ஆடுவதும்]

பறையர்கள் விருத்தம்.

என்னடா நந்தாநீதான் எகிரிகூத் தாடுகின்ருய்
பன்னடா பைத்யக்காரா பண்டார வேஷம்போட்டு
உன்னுடம் பெல்லாம்சாம்பல் உருத்ராக்ஷ மாலையாக
நன்னயமா யணிந்து நாட்டியஞ் செய்கின்ருயே.

வசனம்

அடே நந்தா! இன்றைக் கென்னடா பண்டார வேஷம்போட்டுக்கொண்டு பாப்பார தெய்வமாகிய பரமேச்சுவரனைக் கூப்பிடுகின்ருயே, இதென்னடா உடம்பெல்லாம் சாம்பல் பூசிக்கொண் டிருக்கின்ருய் இதென்னடா ருத்திராக்ஷ கொட்டைகளை கழுத்தில் போட்டுக்கொண் டிருக்கின்ருய்! உனக்கென்னடா பைத்தியமோ? இல்லாவிட்டா வேடிக்கை தமாஷோ! செல்லடாச் செல்ரு யெம்மகனே.

நந்தன் வசனம்

அடா விவேகமில்லாத வீணர்களே! நாம் உலகிற்பிறந்தபோதே சிவத்யானமாக யிருக்கவேண்டும், ஆகையால் நம்மனைவருக்கும்.

நந்தனர் தரு.

சிவனே தெய்வம் சிதம்பரமே கைலாயம்
தவமே பெருமை தான்சம்ப்ர தாயம்

பறையர்

சேரியே சொர்க்கம் ஏரியே கைலாசம்
மாரியே தெய்வம் மதசம்ப்ர தாயம்

நந்தனர்

படிப்பது ஞானம் பார்ப்பது மூலம்
குடிப்பது மதுப்பால் குலசம்ப்ர தாயம்

புலையர்

பிடிப்பது நண்டு புசிப்பது இறைச்சி
குடிப்பது கள்ளு குலசம்ப் ரதாயம்

நந்தனர்

பாழைப் படக்கார் பாவெளி தாண்டி
கோழை யறுப்பீர் குலசம்ப் ரதாயம்

புலையர்

ஆழத்தில் குளிப்போம் அருங்கோடை வந்தால்
கூழைக் குடிப்போம் குலசம்ப் ரதாயம்

நந்தனார்

ஆசையைப் போக்கி ஐம்புலனைச் சுட்டு
மாசற்ற வாழ்வு மதசம்ப் ரதாயம்

புலையர்

பூசைகள் புரிவோம் பொன்னே ருழுவோம்
கூசாமல் வாழ்வோம் குலசம்ப் ரதாயம்

நந்தனார்

மையத் திலாடி மனக்கயிறு பூட்டி
வையத் திலிருப்பார் மறைசம்ப் ரதாயம்

புலையர்

கையிலே கலையும் காலிலே சேறு
பையிலே பாக்கு பறைசம்ப் ரதாயம்

வசனம்

நந்தா! நீயென்ன கொஞ்சமும் அறிவில்லாதவனாய் இவ்வித மாய்ப் பேசுகின்றாயே?

நந்தனார் வசனம்.

அப்பா! அந்த பரமசிவத்தின் கிருபையால் யான் அறிவானந் தமா யிருந்து அஞ்ஞானமாய் கையிலிருந்து வெளிப்பட்டு, காமக் குரோத லோபமோக மதமாச்சரியம், இடும்பை, வேட்கையெனும் அஷ்டவித துர்க்குணங்களையும் சுட்டெரித்து மெய்ஞ்ஞான மார்க் கத்தை நாடி சிதாகாசமாகிய சிதம்பரஞ்சென்று நடராஜ தரிசனங் கண்டு வருவதற்காக நினைந்திருக்கின்றேன். நீங்களும் வருகின் றீர்களா?

புலையர் வசனம்

ஐயையோ சரிதான்! சரிதான்! இந்த கழணிதொழில் யார்பார்ப் பது? அப்படிபோனாலும் என்ன பிரயோசனம், அந்த நடேசர் பாப் பார சாமிதானே, நம்மசாமியைக் கும்பிட்டாலும், கள்ளு, சாராயம் மீன், இறைச்சியெல்லாம் வயிறாறப் புசித்துவிட்டு விளையாடிக்கலாம்.

நந்தனார் வசனம்

அப்படியானால் நான் போகின்றேன்.

புலையர் வசனம்

அடே நந்தா! போகாதே, போகாதே, உனது ஆண்டை பொல்லாதவன், முன்கோபி, அவன்சேதி உனக்கு நன்றாய்த் தெரியும்.

நந்தனார் தரு

இராகம் செஞ்சுருட்டி, தாளம் ரூபகம்

பல்லவி

ஆண்டைக்கடிமைக் காரனல்லவே—யான்
ஆண்டைக்கடிமைக் காரனல்லவே ஆண்டை

அநுபல்லவி

மூன்றுலோகமும் படைத்தளித்திடும்
ஆண்டவர்க்கொத் தடிமைக்காரன் ஆண்டை

சரணங்கள்

ஆசைக்கயிற்றினி வாடிவரும்பசு
பாசமறுத்தவர்க் கடிமைக்காரன் ஆண்டை

தில்லைவெளிக்கலந் தெல்லைக்கண்டேற்றி
தேறித்தெளிபவர்க் கடிமைக்காரன் ஆண்டை

சிதப்பிறையணிந் தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க் கடிமைக்காரன் ஆண்டை

வசனம்

அ ஐயா! நாமனைவரும் நம்மைச் சிருஷ்டித்த பரமசிவனுடைய [illegible]ண்மையென்று மதித்து, சபாநாதர் சந்நிதானத்திற்கு வாருங்கள், [illegible]வழியை நாடுங்கள்.

புலையர் வசனம்

அடே நந்தா! என்டா நீதான் கெட்டாலும் எங்களையும் கெடுக்கப் பார்க்கின்றாய், சரி! சரி!! இவனுக்கும் பைத்தியமோ மன கர்வமோ தெரியவில்லை. நமது நாட்டாண்மைக் காரனாகிய பெரிய கிழவனிடத்திலாகிலும் சொல்வோம் வருவீர்கள்.

[பெரியகிழவன் கோலூன்றி கூனுடன்
குனிந்தவிதமாய் வருகிறான்,]

பெரியகிழவன் வசனம்

என்னடா சேரியிலே! எந்நேரமும் போராட்டாஞ் செய்கின்றீர்கள்.

புலையர் வசனம்

ஐயா! இந்த நந்தன் பண்டார வேஷம்போட்டுக்கொண்டு பைத்தியக்காரனைப்போல கூத்தாடுறான், பாப்பார சாமியை கும்பிட சொல்றான் சிதம்பர தரிசனஞ் செய்யலாம் வாடாயென்றான். அவனுக்கு நீங்களாகிலும் தகுந்த புத்தி சொல்லுங்கள்.

[பெரிய கிழவன் நந்தனைத் தடவி நல்லதனமாய் சொல்வது.]

பெரியகிழவன் தரு

இராகம்-பியாகு தாளம் ஆதி

பல்லவி

ஞாயந்தானோ நீர்சொல்லும்—ஓய் நந்தனாரே நம
ஜாதிக்கடுக்குமோ ஞாய

அநுபல்லவி

மாயமாகவுனக்கு மனப்பேய்ப்பிடித்ததோ
நீயும்பாப்பான்சாமியை நினைத்துக்கும்பிடுவதோ ஞாய

சரணங்கள்

சேரியில்லா வழக்கம் நீர்
செய்துக்கொண்டு வந்தபழக்கம் அந்த
ஊரிலெங்குமது முழக்கம் வெகு
உறுதியாச்சுது ஒழுக்கம் இது

சிதம்பரமென்கிற பேச்சு நாங்கள்
செய்திடுங்காரியம் போச்சி அது
மதம்பிடித்ததுபோ லாச்சு இந்த
மண்டலப்பறையருக் கேச்சு இது ஞாய

பறையருக்கேதுதைப் பூசம் அதைப்
பார்க்கவேயுனக்குவிஸ் வாசம் சிறு
பயல்களுக்கேயுப தேசம் நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம் இது ஞாய

வசனம்

அடே நந்தா! நீயோ சிறுபிள்ளையா யிருக்கின்றாய், அறியாதவ னுகையால் உலகத்தின் சுகானந்தத்தைக் கவனியாமல் பாப்பார தெய்வத்தைக் கும்பிடப் போகின்றாயே! இதென்னடா புத்தியீனம், நமது ஜாதியின் சாமியைக் கும்பிட்டாலும் மதுமாம்ஸ பக்ஷணாதிகள் கிடைக்கும், நமது ஆண்டையும் நமக்கு வேண்டியதெல்லாம் கொடுப் பார். உலகத்தில் பிறந்தால் மதுமாம்ஸம்புசித்து மனைவி மக்களுடன் வாழ்ந்து சுகானந்தமா யிருக்கவேண்டும், நீ என்னடா உடம்பில் சாம்பலை பூசிக்கொண்டு பாப்பார தெய்வத்தையே புகழ்ந்து பேசு கின்றாய் இனிமேலிப்படி செய்யாதே.

நந்தனார் தரு

இராகம்-தெண்டகம் தாளம்-ஆதி

கண்ணிகள்

மீசை நரைத்துப் போச்சே கிழவா ஆசை மிகுக்க லாச்சோ
பாசம் வருக லாச்சோ கிழவா பாவம் விலகிப் போச்சோ
கூனி குறுகிப் போச்சே கிழவா கோபம் விலகிப் போச்சே
அங்கம் தளர்ந்து போச்சே கிழவா ஆங்காரமும் போச்சே
சேரியை நினைந் தாயோ கிழவா சிதம்பரம் மறைந் தாயோ
மானிட ஜென்ம மடா கிழவா மாண்டால் வரு மோடா
அம்பலத் தரச னடா கிழவா ஆளுந் தெய்வ மடா
திருவடி பணி வாயோ கிழவா தேடித் தெளி வாயோ

வசனம்

கிழவா! நீயோ வயது சென்றவன். இத்தனை உலக அனுபவ மெல்லாம் உனக்குத் தெரியும், ஆதியில் பரமசிவம் ஜீவர்களுக்கு நல் லறிவு விளங்க வேணுமென அறிவைக் கொடுத்திருக்கின்றார். அந்த அறிவினால் ஆராய்ந்துணர்ந்து பார்த்தால், ஆண்டவன் பரமசிவ னென்றே மதிக்கலாகும். அவனன்றி ஓரணுவும் அசையாது, அந்த தெய்வத்தை பூஜிப்பவர்களாகிய பாப்பார்கள் எவ்வளவு அழகாக வும் பெருந்தன்மையாகவு மிருக்கின்றார். அந்த பரமசிவனைப் பணி யாத நீங்களென்னவிதமா யிருக்கின்றீர்கள். இனியாகிலும் நீ இகபர சுகானுபவங்களை யனுபவிப்பதா யிருந்தால் சிவத்தியானமா யிருப் பாய், இதோ உனது நெற்றியிலும் சிரசிலும் வாயிலும் விபூதிபோடு கிறேன். சிவ! சிவ! சிவ!

[பெரிய கிழவன் சிவத்யானம்.]

புலையர் வசனம்

என்னடா புலையர்களே! நந்தனுக்கு புத்தி சொல்லப்போன பெரியகிழவனும் அவனுடனே சேர்ந்துக்கொண்டு பேசாமிருக்கின்றானே என்னடா ஆச்சரியம், ஐயா வள்ளுவரே இதற்கென்ன ஆலோசனை?

வள்ளுவன்

புலையர்களே! நான் பஞ்சாங்கத்தை யெல்லாம் சோதித்துப் பார்த்தேன். இந்த நந்தனுக்கு மயான ருத்திரன் பிடித்துக்கொண்டிருக்கிறாப்போல தெரியுது, ஆனால் இது சிக்கிரத்தில் போகாது இவனுடைய கட்டையோடேதான் போகும்போ லிருக்கிறது. இனி தாமதஞ் செய்யாமல், நமது குல தெய்வங்களுக்குப் பூசைபோட்டு பாருங்கள்.

புலையர் வசனம்:—ஆம்! ஆம்! இதுதான் தகுந்த யோசனை.

[புலையர்கள் கள்ளுப் பானைகளையும் சாராயப்புட்டிகளையும் சோறு கறிபடையலும்போட்டு பதி விளக்கு வைத்து குலதெய்வங்களைக் கொண்டாடுவது, நந்தனை உட்காரவைத்து பூஜாலி உடுக்கைதட்டி வர்ணிப்பது.]

பூஜாலி தரு.

(பூஜாலிப் பாட்டு.)

காளி கருப்பண்ணா கனமதுரை பாவாடை
கடல்கன்னி சாமுண்டி காவுகொள்ளும் வீரமுனி

ஒண்டி கறுப்பண்ணா ஓடிவாடா இப்போதே
சண்டி முனியே சந்துமுனி ஓடிவாடா

நந்தன் முடிமீதில்வந்து நல்வாக்கு நீர்கொடுப்பீர்
இந்த சமயத்தில் எல்லோரும் வந்திடுவீர்

[புலையர்கள் செங்கல்லைநாட்டி விபூதிகுங்குமம்பூசி கள்ளு குடமும் இறைச்சிவகைகளும் சாதமும் படையல்போட்டு பதிவிளக்குமுன்பாக தீபாராதனைசெய்து சகலரும் விழுந்து கும்பிடுதல்.]

நந்தன் வசனம்

அடா மூடர்களே! ஈதென்னடா அநியாயம் செய்கின்றீர்கள் அறிவில்லாத மடையர்களே இனி இவ்விதமெல்லாம் செய்யாதீர்.

[அவர்கள் செய்யும் பூஜையை நந்தன் கலைத்துவிட்டு சகலரையும் அடிக்கின்றான், அவர்கள் அடிபடமுடியாமல் ஓடுவது.]

2-வது—சீன்



[இடம்—வேதியர் வீடு]

கதாநாயகர், வேதியர், நந்தன், புலையர்கள்.

நந்தனார் விருத்தம்.

ஐயனேயெனையாட் கொண்ட அந்தண சொரூபமேயான்
பையவே தில்லைக்கேகி பாம்பணி சிவனைக்கண்டு
துய்யனே கரங்குவித்து தூரத்தி லிருந்துபார்த்து
மெய்யனே ஓடிவாரேன் மேன்மையா யனுப்புவீரே.

வசனம்

சுவாமி! யான் சிதம்பரக்ஷேத்திரத்திற்குச் சென்று நடராஜ மூர்த்தியின் கோவிலுக்கு முன்னிருந்து தூரத்திலிருந்துகொண்டே சுவாமியைப் பார்த்துவிட்டு வருகின்றேன் அடியேனை அனுப்புவீர் சுவாமி.

வேதியர் வசனம்

என்னடா நந்தா! ஏதேது சிவபக்தியில் மூழ்கிவிட்டாயோ! எதிரில் நிற்காதே போடா.

நந்தனார் வசனம்

ஐயர் கோபமா யிருக்கின்றார் நாளைக்குத்தான் போவோம்.

[முன்பு நந்தனாரிடம் அடிப்பட்ட புலையர்கள் ஓடிவருவது.]

வேதியர் விருத்தம்.

அன்னுடா நீங்களெல்லாம் அடிஉதை பட்டோர்போல
என்னிடம் ஓடிவந்தீர் எவனுன்னை அடித்துதைத்தான்
பன்னுவீர் விபரமாக பயப்பட வேண்டாம்நீங்கள்
நன்னய தைரியமாக நவிலுவீ ரெந்தன்முன்னே.

வசனம்

அடா அடிமைகளாகிய புலையர்களே! என்னடா எங்கேயோ போய் நன்றாய் கள்ளுசாராயங் குடித்துவிட்டு எவர்களிடத்தில் வாயாடி உதைப்பட்டு ஓடிவந்தீர்கள். எவன் உங்களை இவ்விதமாய் அடித்து உதைத்து காயப்படுத்தித் துரத்தினன். உண்மை விபரமாய்ச் சொல்வீர்கள்.

புலையர்கள் சொல்வது

நொண்டிச் சிந்து

ஐயேஒரு சேதிகேளும்—உங்கள்
அடிமைக்காரபறையன் நடத்தையெல்லாம்
வரவர கெட்டுப்போச்சு—சேரியில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்
குடியிருக்க மாட்டோம்—எப்போதும்
கூக்குரல்போடுகிறானுக்கைமறந்தே
இருப்பான் ஒருவேளை—பொல்லாத
ஏக்கமடைந்தவன்போல நாக்கைமடித்து
சிரிப்பா னொருவேளை—தில்லை
சிதம்பரமென்றுசொல்லி மதம்பிடித்தே
அழைப்பா னொருவேளை—எங்களையும்
அண்ணேன்வாவென்றுசொல்லி கிண்ணாரங்கொட்டி
குதிப்பா னொருவேளை—திக்குமுக்கல்
கொண்டவன்போலெதையோ கண்டவன்போல்
ஒளிப்பா னொருவேளை—மாய்போலே

கையசைக்கல்மெய்யசைக்கல் காலசைக்கலும்
இருக்கா தொருவேளை—தாளம்போட்டு
எக்கலிகொட்டியே குடிசைக்குட்புகுந்து
பேசா னொருவேளை—கண்டதெல்லாம்
புரட்டென்றுசொல்லுவான் முரட்டுத்தனமாய்
மன்னாரு சாமிபோல—கிளம்பி
வாய்விட்டலறுங்கூ லூரெட்டுமே
ஐயோசிவனே யென்பான்—கீழே
பிரண்டழுவான் யாவரையுந்தொழுவானே
தூண்டி மீனதுபோலே—துள்ளிதுள்ளி
துடிப்பான் பற்களைகடிப்பானே
சிவனென்று மூன்றுதரம்—நாங்கள்
செப்பவேணுமல்லாவிடில் எட்டியுதைப்பான்
கோவிலிற் போவோமென்பான்—எங்களையும்
கும்பிடச்சொல்லி யில்லாவம்புபண்ணுவான்
சுற்றிவரச் சொல்லியடிப்பான்—சிவன்பேரைச்
சொல்லடாசந்நிதியில் நில்லடாவென்பான்
சொல்லித் துலைக்கவேணும்—இல்லாவிடில்
சுக்குமாந்தடிகொண்டு நொக்கிடுவான்
கொம்பேரி மூக்கன்போல—முதுகினில்
குத்துவான்புலிபோலே கத்துவானே
இதுஎன்ன காரணமோ—எங்களுக்கு
ஈனமாயிருக்குது மானமல்லவோ
கறுப்பண்ண சாமிதானோ—இருளன்
காட்டேரிவீரன் முனிவீட்டேரியோ
பாவாடை துரைதானோ—ரணபத்ர
காளியோ உன்மத்தவீரன்தானோ
பூஜைகளும்போட்டு பார்த்தோம்—ஒன்றிலும்
போவதில்லை காரியமாவதில்லையே
வள்ளுவரைக் கேட்டோம்—அவர்
வகுத்துச்சொன்னா ரிதைவிடுத்துச்சொன்னார்
மயான ருத்திரனார்—பிடித்து
வாட்டுதடாயிப்படி யாட்டுதென்றார்
தெளியாதென்று சொன்னார்—ஐயே
தெளியாதென்று சொன்னார்.

வசனம்.

ஐயே! எமது சேரிலிருந்த நந்தனுக்கு சிதம்பர பைத்தியம் பிடித்துக் கொண்டு குதிக்கிறன், கும்பிடுகிறன் எங்களை யெல்லாம் அடிக்கிறன், இதென்னடா துன்பமென்று எமது வள்ளுவரை கேட்டோம், அவர் மயான ருத்திரன் பிடித்துக்கொண்டது, இது தெளியாதப்பாவென்றார். யாங்கள் குல தெய்வங்களுக் கெல்லாம் பூஜை போட்டுபார்த்தோம், அது எதினாலும் தீரவில்லை யாங்கள் உங்களிடத்தில் முறையிட்டோம் தாங்கள் அவனை அடித்து மிரட்டி தண்டித்துத் தகுந்த புத்திமதி சொல்லி யனுப்பவேணும் சுவாமி.

வேதியர் விருத்தம்

காலமே வந்தானிங்கே கள்ளக் கும்பிடுகள்போட்டு
பாலனைப் போலேபேசிப் பசப்பினன் போடாவென்றேன்
வேலைசூழுலகிலிந்த வீணனைப்போலே காணேன்
சீலமாஞ் சிதம்பரத்தைச் சேரவே விடைகொடேனே.

வசனம்

புலையர்களே! அந்த நந்தன் அதிகாலையில் என்னிடத்தில் வந்து மிகவும் நல்லவனைப்போல எத்தாகப்பேசி பக்தியிற் சிறந்த உத்தமனைக உடம்பெல்லாம் விபூதி பூசிக்கொண்டுவந்து, சுவாமி யான்சிதம்பரத்திற்குப்போய் நடராஜர் தரிசனங் காணவேண்டும் அனுப்புவீரென்று சொன்னன். யான் நகைத்து ஈதென்ன ஆச்சரியம் பறையன் சிதம்பரம் போகலாகுமோ வென்று அவனைப்பார்த்து இந்த சமயம் அந்தப்பேச்சை பேசாதே போடாவென்று துரத்தினேன். இப்போது நீங்கள்வந்து அவன் செய்த கொடுமைகளை யெல்லாம் சொன்னீர்கள். நல்லது யான் நாளையதினம் அவனைவிசாரித்து தண்டிக்கின்றேன், நீங்கள் கழனிக்குப் போவீர்கள்.

பறையர்கள் வசனம்:—அப்படியே மஹாபாக்கியம் சுவாமி!

[சகலரும் போகிறர்கள் நந்தன் பாடிக்
கொண்டே வேதியரிடம் வருகிறர்.]

நந்தனார் தரு

இராகம்-உசேனி தாளம்-ரூபகம்

கண்ணிகள்

தில்லையம்பலத் தலமொன் றிருக்குதாம் கண்டபேர்க்கு
ஜென்மமான பிணியைக் கருக்குதாம்

உயரஞ் சிகரக்கும்பந் தெரியுதாம் பார்த்தவர்க்கு
உள்ளங்குளிரக் கருணை புரியுதாம்

பண்ணவா யன்பராலும் தேடுமோம் தில்லைக்காட்டில்
பாம்பும்புலிக்கு நிர்த்த மாடுமோம்

அரியரபிரம்ம னெழுத்தைத் தள்ளுமாம் ஆசையுமது
வானந்த முழுக்காட்டிக் கொள்ளுமாம்

போய்வருபவர் புண்ணிய சாலியாம் தருமராஜன்
புகழ்ந்துபேசும் உத்தம சாலியாம்

உருவில்லாத குருவொன் றிருக்குதாம் மூலக்கனலை
ஊதியெழுப்பிக் காணப் பெருக்குதாம்

உருவமாகி வெளியே வருகுதாம் நான்மறைக்கு
முணர்வில்லாதகாட்சி தருக்குதாம்

போய்வருக உத்தாரந் தாருமே பொன்னடித்தூள்
போற்றுவேன்கண்ணாலே பாருமே

[வேதியர் நந்தனரை விசாரிப்பது.]

வேதியர் விருத்தம்

என்னடா நந்தாநீதான் எப்போதும் பறையர்தன்னை
துன்பஞ்செய் தடித்துதைத்து து[illegible] சிவன்பாதத்தை
அன்பாய் பூஜிப்பீரென்று அதட்டியே மிரட்டிக்கொண்டு
நன்மையாய் தொழில்செய்யாமல் நாள்தோறும் கெடுக்கலாமா.

வசனம்

அடா நந்தா! நீ என்னடா கொடிய துஷ்டனு யிருக்கின்றாய், கழனியில் வேலைசெய்யும் புலையர்களை யெல்லாம் சிவபஜனை பாடச் சொல்லி அடிக்கின்றாயாம், பத்திரம்; இனிமேல் நீ அவ்விதமாய் சகலரையும் தொந்திரவு செய்துக்கொண் டிருந்தால் உன்னை தண்டித்து இம்சை செய்வேன். துஷ்டா!

நந்தன் வசனம்

சுவாமி! அந்தப் புலையர்கட்கு நான் வெகு விதத்திலும் நன்மை யடையும்படி சிவநாம பாராயணஞ் செய்வீரென்று சொன்னேன். அவர்கள் கேட்கவில்லை. அதற்காக நான்விசனிக்கவில்லை, அடியேன் தற்சமயம் சிதம்பரக்ஷேத்திரத்திற்குச் சென்று நடராஜமூர்த்தியை தரிசித்து வருகிறேன்.

நந்தனார் தரு

இராகம்-தேசிகதோடி தாளம்-ஆதி

பல்லவி

உத்தாரந் தாருமையே—எனக்
கொருவருமில்லை பரகதியடைய

அநுபல்லவி.

வித்தைகள் கற்றதுமில்லையான்சிவ
பக்தியாய்ச்சென்று பரகதியடைய உத்தா

சரணங்கள்.

குற்றங்களெத்தனைக் கொடியேன்செய்தாலும்
அத்தனையும்பொறுத் தாதரவாக உத்தா

பெண்டுபிள்ளையென்றும் பேயனைப்போலவே
கண்டுகளித்துக் காலங்கழித்தேன் உத்தா

தில்லைசிதம்பரத்தை தெரிசித்துவந்துங்கள்
எல்லையைக்காத்துக் கொண்டிருக்கிறேனையே உத்தா

வசனம்

சுவாமி! அடியேன்மீது மனமிரங்கி இனியாகிலும் சிதம்பர க்ஷேத்திரத்திற்குப்போய் நடராஜமூர்த்தி தரிசனங்கண்டுவருவதற்கு உத்திரவு தந்தனுப்புவீர் அய்யா!

வேதியர் தரு

இராகம்-லாவணி ஆதிதாளம்

பல்லவி.

பறையாநீ சிதம்பர மென்றுசொல்லப்
படுமோடோ போகப்படு மோடா—அடா பறை

அநுபல்லவி.

அறியாத்தன மாய்ச்சொன்னு லினிமேல்
அடிப்பேன் கூலியைப்பிடிப்பேன் பாவிப் பறை

சரணங்கள்.

சிதம்பரமென்பதை விடு கொல்லைச்
சேரியிலேவந்து படு நாத்தைப்
பதத்திற்பிடுங்கி நடு கறுப்
பண்ணனுக்கேபலி கொடு அடா பறை

எப்போதும்ஒருதடி பிடி கையில்
எடுத்துக்கொண்டேதமுக் கடி உள்ளங்
கற்பனையாய்ப்பள்ளு படி கால்
நோகாமல்காடியைக் குடி அடா பறை

கள்ளந்தீருதற்குப் பாரு என்
கால்படும்பண்ணையில்வீற் றிரு இது
சொன்னதுமில்லையோஉன் குரு நீ
சுகமுடன்வாழ்ந்துகொண் டிரு அடா பறை

வசனம்

அடே நந்தா! நீ என்முன் நிற்காதே சேரிக்குப்போடா! இனி தாமதித்திடில் எனக்குக் கோபம்வரும்.

நந்தன் வசனம்

சுவாமி! மனித ஜென்ன மெடுத்தும் பகவானைக் கண்டு பூஜித்தால்தானே நன்மையுண்டாகும்.

வேதியர் விருத்தம்

ஓதியடிவீராயென்றும் உக்கிரமாடாவென்றும்
பதிபெறுங்கறுப்பாவென்றும் பாவாடைராயாவென்றும்
துதிபெறுமிருளாவென்றும் தொட்டியச்சின்னனென்றும்
மதுமாம்ஸபடையல்போட்டு மகிழ்ந்துகும்பிடுவாய்போடா.

வசனம்

அடா நந்தா! நீசொல்வதும் சரிதான், அவரவர்குலாசாரத்தின் படியே அவரவர்கள் முன்னோரால் கொண்டாடும் குலதெய்வங்களைத்

தானே கொண்டாடவேண்டும். அவ்விதமாகவே நீயும் 'உனது குலா சாரப்படியோ உங்கள் தெய்வமாகிய வீரனுக்கும், மாடனுக்கும், கறுப்பனுக்கும், பாவாடை ராயனுக்கும், இருளனுக்கும், தொட்டியச் சின்னனுக்கும், மதுமாம்ஸ பக்ஷண படையல் போட்டுப் பூமியில் விழுந்து கும்பிட்டு குல தெய்வங்களே சதாகாலமும் தனந்தான்யம் பசு புத்ராலபந் தருவீர்களென்று வேண்டிக்கொண்டு சுகமாயிருப்பாய்.

நந்தனர் தரு

இராகம்-தன்யாசி தாளம்-ஆதி

பல்லவி.

சில்லரை தெய்வங்களை சிந்தித்து பூஜித்தால்
ஜென்ம சாபல்யமாமோ.

அநுபல்லவி

அல்லல் துன்பங்களை அகற்றி மோக்ஷங்கொடுக்கும்
ஆதி பரமசிவன் பாதத்தைக் காணமல் சில்

சரணங்கள்

பந்தபாசத்திற்சிக்கி பாதவிப்பதைவிட்டு
சிந்தையிற்பஞ்சாக்ஷரம் ஜெபித்துக்கொண்டு சில்

எந்தவேளையிலும் எம்பெருமான்சிவனை
ஏற்றித் துதிபுரிந்து

கந்தசாமிக்கருள் கபாலீஸனைப்பணிந்து
சிந்தைமகிழ்ந்திட எந்தனுக்குதவிசெய்வீர் சில்

வசனம்

சுவாமி! தாங்கள் அறியாத தொன்றுமில்லை. அடியேன் ஜனனங்கள் தோறுஞ் செய்த பாபவிமோசன மாவதற்காக நடராஜனைப் பணிந்து நற்கதியடையவேண்டும். ஆகையால் என்னை சிதம்பர க்ஷேத்திரத்திற் கனுப்புவீர் சுவாமி?

வேதியர் தரு

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ஆதி

பல்லவி

சிதம்பரம் போகாதே—சொன்னேன்
சிதம்பரம் போகாதே

அநுபல்லவி

சிதம்பரம்போனால் ஹிதம்பெறலாமென்று
சேதிசொல்லுருயுந்தன் சாதிக்கடுக்குமோ சிதம்

சரணங்கள்

கள்ளக்கும்பிடுதனைப் போடாதே—உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே

மெள்ளச்சொல்லடா முழுமூடாகிமே
தள்ளிவிட்டுந்தன் தலையையுடைப்பேன் சிதம்

நாத்தைப்பிடுங்கிகழனியில் நடவேணும்—அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்

பார்த்துப்பரம்படித்துப் பழுதுவாராமல்
பாயுஞ்சலம்விடுத்துப் பார்த்திடுவாய்நீ சிதம்

அடிக்கடிமறுத்துநான் சொல்லவோ—நீ
அடிமைக்காரப்பய லல்லவோ

எடுத்துக்காட்டுவே னிருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினுல் தவடையிலடிப்பேன் சிதம்

வசனம்

அடே நந்தா! நீ என்ன; யான் எவ்வளவுசொல்லியும் கேளாமல் ஒரே பிடிவாதமாய் பேசுகிருய் உனதுமுதாதைகள் முதல் எனக்கு அடிமை யென்று முறிச்சீட்டு எழுதி கொடுத்திருப்பதை கவனித்து ஆண்டைக் கடுமையென்று அடங்கிப் பேசாமல், நீ சிதம்பரத்திற்கு ஓடிப்போனுல் எனது வயல்களில் யார்காவல், இந்த வருஷத்தில் உனக்கு பதிலாய் யாரடா ஏருழுவது, நாத்துநடுவது, களைபிடுங்குவது, பயிரிடுவது, துஷ்டா! போ! கழனிக்கு, இனிமேல் இங்கு நின்ருல் அடித்து உதைத்துத் துரத்துவேன், போடா போ! பிழைக்கத் தெரியாத புலையனே. [நந்தன் போகிருன்.]

3-வது—ஸீன்.



[இடம்—பறைச்சேரி]
கதாநாயகர், நந்தனார், பறையர்கள்.

[நந்தனார் பாடிக்கொண்டே சேரியில் வருவது.]

நந்தனார் தரு

(அதிலாவண்ய) வர்னமெட்டு.

பல்லவி

ஹரனேசிதம்பர தெரிசனம்
அடியேன் காண்பேனோ ஹர

அநுபல்லவி

பரமேஸ்வரா பக்தரக்ஷகா
தரிசனந்தர் தருள்சிவசிவா. ஹர

சரணங்கள்.

சந்த்ரசேகரா கங்காதரனே
அந்தரத்தோர்க் கருட்பிரகாசனே
சிந்தைமகிழ்ந் தெந்தநாளில்
சிதம்பரதெரிசனங் காண்பேனோ சந்

பன்னிரண்டு பறையர்கள் வசனம்.

நந்தன் சுவாமி! நமஸ்காரம்.

நந்தனூர் வசனம்.

சுவாமிகாள்! நமஸ்காரம், நமஸ்காரம்.

[பன்னிரண்டு பறையர்களையும் பெரியகிழவன் விசாரிப்பது.]

பெரியகிழவன் தரு

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி,

பல்லவி

நடந்ததென்ன சொல்லுவீர் வேதியர்
தடங்கலில்லா சிதம்பர மேகச்சொன்னூரா நடந்

சரணங்கள்

ஜடலமெடுத்துயாம் சாயுஜ்யமடைய
சதா சிவானந்தத் திருநடனம்
சந்தோஷமாய்க்கண்டு சிந்தைமகிழவே
அந்தணர் சொன்னூரா நந்தனூரே அங்கே நடந்

வசனம்.

நந்தன் சுவாமிகாள்! தேவாள் சிதம்பரம் போகவேணுமென வேதியரிடம் விடைகேட்கப் போனீரே அங்கு நடந்த விஷயங்களென்ன? தெரிவிப்பீர் சுவாமி!

நந்தனூர் விருத்தம்

துன்மார்க்க புலையரெல்லாம் துரிதமாய் ஓடிப் பாப்பான்
முன்னூலென்மீதிற் கோட்சொல் மொழிந்தன ரவர்சினந்து
அன்யாயஞ்செய்த நந்தா அடா! சிதம்பரம் போகாதே
உன்குல தெய்வபூஜை உறுதியாய்ச்செய் போயென்றூர்.

வசனம்

சுவாமிகாள்! யானென்னவென்று சொல்வேன்? யான் உலக நன்மைக்காக இந்த சேரியிலிருக்கும் புலையர்களை சீர்திருத்தஞ்செய்ய வேணுமென்று அநேகவிதமாய் சகலருக்கும் வேதரகஸ்ய விளக்கமாக பரமேஸ்வரனை தியானஞ்செய்துகொண்டிருப்பீரென்று சொன்னேன். ஞானவான்களாகிய நீங்கள் மாத்திரம் சிவபக்தர்களாய் விளங்கி ஞானானந்தமா யிருக்கிறீர். மற்ற அஞ்ஞானப் புலையர்கள் என் சொல்லைத் தடுத்ததால் நான் அவர்களுக்கு நன்மதியுண்டாகுமென்று அடித்த காயத்துடன் வேதியரிடம்சென்று என்மீது கோள் சொன்னார். வேதியரும் என்மீது கோபித்து இப்படி செய்யலாமாவென்றார்? யான் அவர்களுக்கு நன்மார்க்கம் போதித்தேன் ஆனாலும், யான் தற்சமயம் சிதம்பரம்போய் வருகிறேனென்றேன், அவர் போகக்கூடாதென்று சீறி விழ்கிறார், என்ன செய்யலாம் திருவுளச் செயல் எவ்விதமோ?

பெரியகிழவன் விருத்தம்.

சின்மயா னந்தஜோதி சிவனருட் படியேயாமும்
தன்மையாய் சிவத்யானம் தாணியில்புரிந் தெந்நாளும்
இன்பமா யிருப்போமாகில் ஈஸ்வரன் கருணைசெய்வார்
அன்புள்ள நந்தன்சாமி அடியேனும் புகன்றிட்டேனே.

வசனம்.

நந்தன்சாமி! நாம் சதாகாலமும் சிவத்யானமாயிருந்தால் பரமசிவம் எவ்விதமாகிலும் கருணைசெய்வார். இனிமேல் தாமதஞ்செய்யாமல் கனகசபாபதியை கருத்திலிருத்தித் துதிபுரிவோம்.

நந்தனார் வசனம்.

சுவாமிகாள்! இதுவும் ஓர் விசேஷந்தான். ஆனால் நாம் பக்தியானந்தமாய் பரமசிவனைப் புகழ்ந்து பாடுவோம் வருவீர்கள்.

[நந்தனார் தன்னுடன் சேர்ந்த பக்திவான்களுடன் சிவபஜனைசெய்வது]

நந்தனார் தரு.

இராகம் செஞ்சுருட்டி, தாளம்-ஆதி.

பல்லவி

பாடுவாய் மனமே—சிவனைக்கொண்
டாடுவாய் தினமே

அநுபல்லவி.

இந்திரன் முதலிய இமையவர்க்கதிகார
நந்தியின்மீதேறும் நம்பன் பதம்போற்றி பாடு

சரணங்கள்.

ஆலந்தனையுண்ட மரைரக்காத்த—திரு
நீலகண்டன் கழல்பெற நெறியுடன்போற்றி பாடு

சீலமாதவர் சித்தத்திநின்றாடுஞ்
சூலபாணியெனுஞ் சுயம்புதாள்போற்றி பாடு

மோகமாந் துன்பத்தில் மூழ்கிக்கெடாமல்
ஆகமமுறையிடும் அந்திவண்ணனைபோற்றி பாடு

பஞ்சாக்ஷரந்தன்னைப் பக்தியாயுருவேற்றி
மெய்ஞ்ஞானம்பெற்றுய்ய மேலோனைபோற்றி பாடு

வசனம்

நமப்பார்வதிபதே ஹரஹர மஹாதேவா.

நந்தனர் தேவாரம்

ஆதியேஞான ஜோதியிந்த
அவனியில் பிறந்தனுதினம்
நீதியின்றிய மாந்தர்களோடு
நேசித்தே லோகபாசமாய்
கோதிலாமறை தேடிடுமுன்னை
கோரிடாம லிருக்கினும்
தீதிலாதெனைக் காத்தருள்புரி
தில்லையில்வாழுந் தேசிகா.

வசனம்

அர ஹர மஹாதேவா! அமரர்கள் பூஜிதா! தரணியி லுந்தனை சதாகாலமும் நம்பினேன் சைதன்ய வஸ்துவே.

நந்தனர் தரு

இராகம்-தோடி, தாளம்-ஆதி

பல்லவி

சிதம்பரமே நினைமனமே—முக்தி
பதம்பெறலாகு முனமே

அநுபல்லவி

சதம்சதமெனும் பொருள்
பதம்பெறவா மருள்

சமரசநடம்புரி சாமிசிதம்பரநிமலன்
திருவுருநீகொள்ள ஹரஹர சிதம்

சரணங்கள்

ஒழியாக்கவலைகொண்டு விழலா—யானுய்
உண்மையில்லாவீட்டை நிழலாய்

தழுவாதிருந்ததில்லைசலனமில்மேல் வீட்டை
சார்ந்தாலல்லோநல்லசாபல்யமாம் பாட்டை
சந்ததமும்பெற பந்தமுமேயற
எந்தன்வினைத்திர சந்ததமருள்பெற சித

தேகமெடுத்தஅருமை யறியாய்—மோசத்
தெரிவையர்வலைச்சிக்கி முறியாய்

சாகுமட்டுஞ்சம்ஸாரமே மேலிட்டு
சலியாமலேயுழைத்துச் சண்டாளமாந்துட்டு
சம்பாத்தியமதை வம்பாகும்விதி
நம்பாதித்ததி தெம்பாயதிபதி சித

உனக்குள்ளேயுணர்வாய்நீ மோனம்—உண்மை
ஓம்வழிகாட்டுமே ஞானம்

தனக்குச்சிதம்பரனுசார்ந்தாலே தன்மயம்
சத்தியமாய்க்கூட்டும்சாம்ப்ராச்ய சின்மயம்
சரிவரசிவகுரு பரமமாய்வரு
முருவெளியெனுமொரு பொருளதுவாந்திரு சித

நாமாவளி

அரஹரசிவசிவ அம்பலவாணு
அமரர்கள்பூஜித அரவாபரணு

ஜோதிப்ரகாச சுயம்புவானந்தா
நீதியுல்லாசா நின்னடிதொழுதோம்

வசனம்

நமப்பார்வதிபதே ஹரஹர மஹாதேவா! அன்பர்காள்! என் மனதில் சதாகாலமும் சிதம்பர தெரிசனங் காணவேணுமெனும் ஆசை அதிகரித்திருக்கின்றது. இன்றையதினம் ஆண்டையாகிய வேதியரிடத்திற்போய் விடைகேட்டு வருகிறேன்.

[நந்தன்போகிறார்.]

3-வது ஆக்ட்

1-வது—சீன்.



[இடம்—வேதியர் வீடு]

கதாநாயகர்:— நந்தனார், வேதியர்.

[வேதியர் ஆசனத்திலுட்கார்ந்திருக்கின்றார்,
நந்தனார் பாடிக்கொண்டு வருகிறார்.]

நந்தனார்—தேவாரம்.

ஐய்யனே மலர்கையனே கைலை
தூய்யனே புகழ் மெய்யனே
பையரவணிந் தன்பர் பூஜிக்கும்
பாதனே வேத கீதனே.

வேதியர் வசனம்.

ஈதென்ன ஆச்சரியம்? இந்த நந்தன் சதாகாலமும் சிவத்யானமாகவே இருக்கின்றானே, ஏதோ இவனுக்கு யாரோ உபதேசஞ்செய்து விட்டார்கள் அருகில் வரட்டும் விசாரிப்போம்.

நந்தன் வசனம் :—சுவாமி! நமஸ்காரம்.

வேதியர் வசனம்.

சுகிபவா! சுகமாயிருப்பாய்? நந்தா! நீயென்ன உனது ஜாதி ஆசாரந்தவறி சைவ சமயத்தாரை யெல்லாம் பரிகாசிக்கும் விதமாய் விபூதி ருத்திராக்ஷமணிந்துகொண்டு வருகின்றாயே, என்னடா? உன்னைப்போன்ற பண்ணையாள்கள் இப்படித்தானா யிருக்கின்றார்.

நந்தனார் வசனம்.

சுவாமி! உலகிற்பிறந்த மனிதர்கள் அஞ்ஞானமாய்கையிலிருக்கும்வரையில், கண்டதேகாக்ஷி கொண்டதே கோலமென்னுந் தன்மையாய் ஊற்றைச் சரீரத்தை வளர்ப்பதற்கு நாவிற்கினிய நல்லுணவுதானென மதித்து, மதுமாம்ஸ பக்ஷணாதிகளுண்டு மனைவி மைந்தர்களுடன் சந்தைக் கூட்டத்திற் சிக்கிய நாய்போலுழன்று மோக்ஷவழி தெரியாதவர்களாய் இறந்து பிறந்துழல்வார்கள். ஆனல், அறிவென்னும் பிரகாசத்தினல் அஞ்ஞான மாய்கை விலகினல் சுத்தாத்மாவாய் விளங்கி அருணோதயத்தி லெழுந்து ஸ்னானபான நேமநிஷ்டைபுரிந்து சிவத்யானமா யிருப்பார்கள். ஆகையால்,

அறுசீரடி விருத்தம்

வேதியரே பெரியவரே நல்லவரே
நான்கடையன் விண்ணோர் மெச்சும்
சாதியரே பலகலையுங் கற்றுணர்ந்து
புரையில்லாத் தவமே செய்யும்
போதியரோ புத்தியில்லா நான்புலைய
னேதறியேன் புண்ய மூர்த்தி
ஆதிகுரு சிதம்பரத்தைக் காணவென்றே
னாசைகொண்டேன் அனுப்பு வீரே.

நந்தனார் தரு

இராகம்-நாதநாமக்கிரியை, தாளம்-ரூபகம்

பல்லவி

தில்லைச்சிதம்பரத்தை யொருதரமாகிலும்
தெரிசித்துவாவென் றுத்தாரந் தாருமையே தில்

அநுபல்லவி.

தில்லைச்சிதம்பரத்தைக் கண்டால்பிறவிப்பிணி
இல்லையென்றுபெரியோர் சொல்லக்கேட்டிருக்கிறேன் தில்

சரணங்கள்.

அல்லும்பகலுந்திரு அம்பலநாயகன்
அடிமலர்தனிலெந்தன் முடிவணங்கிதுதிக்க தில்

ஆதிமுதலாயென்னை யடிமைகொண்டாதரிக்கும்
வேதியரேயெந்தன் மீதில்தயவுசெய்து தில்

வசனம்

சுவாமி! பூவுடன் சேர்ந்த நாரும் மணம்பெறு மென்பதுபோல வேதகுலத்திற் பிறந்த உம்மிடத்தில் அடியேனுக்கும், அந்த சிதம்பர தெரிசனங்காண ஆசையாயிருக்கிறது. தேவரீர் தயைபுரிந்து ஆத்ம ரக்ஷகனாகிய நடராஜபெருமானை தரிசிப்பதற்கு சிதம்பரம்போய் வரு வாய் நந்தாவென்று தமது திருவாக்கினா லொருவார்த்தை சொல்லி யனுப்பும் சுவாமி?

வேதியர் விருத்தம்.

முத்தனாய் முருகனாகி முருகப்ப முதலியாராய்
பத்தனாய்க் காசைசேர்த்து பணக்காரப் பிரபுவாகி
சத்யரிச் சந்த்ரனெங்கள் ஜாதியா னென்றூர்போலுன்
சித்தத்தின் கர்வத்தால்நீ சிதம்பரம் போகலாமோ.

வசனம்

அடா நந்தா! என்ன சொன்னாய், எனக்கு அடிமையானதினால் நீயும் வேதியனாய் விடலாமென்று யோசிக்கின்றாய். சரி! சரி! மெல்ல மெல்ல பிராமண வம்ஸத்தை எட்டிப்பார்க்கலாமென்று நினைக்கின்றாய். பத்திரம்; ஜாக்ரதை; சேரியைவிடுத்துச் சிதம்பரம் போகாதே, அடே! நீயோ புலையன்? நீ உனது குலாசாரத்தை விடுத்து மேற் குலத்தார் அனுஷ்டிக்கும் விரதத்தை நாடலாமா? அடாமூடா!

வேதியர் எண்சீரடி யாசிரிய விருத்தம்.

புத்திசொல்லிக் கேளாத மூடாவுந்தன்
புரட்டெல்லாம் நானறிவேன் போடா போடா
பத்தியென்றுஞ் சித்தியென்றும் பறையர்க்கேது
பாப்பார தெய்வமது பலிக் காது

குற்றமுண்டுன் ஜாதியிலே வழக்கமில்லாக்
கொள்கையது சேரியிலே கூடா தப்பா
சித்தசுத்தி யில்லாத புலையாரந்த
சிதம்பரத்தை மனதினிலே சிந்திப் பாரோ.

வசனம்

அடா நந்தா! மதுமாம்ஸ பக்ஷணஞ்செய்யும் புலையர்களுக்கு காத்தான், கறுப்பன், நொண்டி, வீரன், இருளன், பாவாடைராயன் முதலான தெய்வங்களிருக்கும்போது சைவ பிராமணர் பூசிக்கும் நடராஜ மூர்த்தியை பூஜிக்க நீ சிதம்பரம் போகலாமா? சீச்சீ சேரிக்குப் போடா! பைத்தியக்காரா.

நந்தனார் தரு

இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஆதி

பல்லவி.

சிதரம்போகாம விருப்பேனோ—என்
ஜென்மத்தைவீணாக்கிக் கெடுப்பேனோ சிதம்

அநுபல்லவி.

பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் ஜடலமுமிங்கே சிதம்

சரணங்கள்.

ஆசைநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கே சிதம்

வசனம்

சுவாமி! யானென்ன செய்வேன்? எனது உடல் உம்மிடத்திலும் உயிர் சிதம்பரத்திலுமா யிருக்கின்றதே. எனது ஆவியானது சிதம்பர க்ஷேத்திர கனசபையி லிருக்கும் நடராஜமூர்த்தியை துதித்துக்கொண் டிருக்கிறது எனது அவயவங்கள் உம்மிடத்தில் நடமாடிக்கொண் டிருக்கிறது ஆகையால் அடியேனுடைய அவயவாதிகளுடன் ஆத்மசஹிதமாய் சிதம்பர தரிசனஞ் செய்வதற்கு அனுப்புவீர் சுவாமி?

வேதியர் தரு

இராகம்-அசாவேரி, தாளம்-ஆதி

பல்லவி

சிதம்பர தெரிசனமோ—நீயதைச்
சிந்திக்கலாமா பறையா சிதம்

சரணங்கள்

சிதம்பரதெரிசனஞ்-சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம்நீ-சொல்வதுமாயம்
செல்லாதே இங்கே நில்லாதே
சேரிக்குப்போடா-நாளைக்குவாடா சிதம்

ஜனகமஹாமுனி-யோகிகள்தேடிய
கனகசபேசனைக்-கண்டறிவாயோ
பேசாதே கை வீசாதே
வீரனைத்தொழடா ஏரியைஉழடா சிதம்

தவமுடையோர்கள்-தரிசிக்குமந்திரஞ்
சிவபதமென்று-சிந்திக்கலாமா
ஆகாது வினை போகாது
அறிவுனக்கில்லை-அறுதலிமகனே சிதம்

வசனம்

அடா நந்தா! என்னடா எந்நேரமும் போராட்டஞ் செய்கின்ருய், இராவும்பகலும் பயிரிடுந் தொழிலைக் கவனிப்பதுமில்லை, ஏற்ற மிறைப்பதுமில்லை, ஏருழுவதுமில்லை, நாத்து நடுவதுமில்லை இவ்வித மாய்க் கழணியை கவனியாமல், எந்நேரமும் சிதம்பரம் போவதற்கு அனுப்புவாயென்று அழுதுக்கொண் டிருக்கின்ருயே. நீ சிதம்பரம் போனல் என்ன செய்வாய் நீயோ புலையனுச்சுதே, நீஜனத்திரளில் போகவுங் கூடாதே, நீ திருக்குளத்திலிறங்கி ஸ்நானஞ் செய்யவுமுடியாதே சுவாமியை தரிசிக்க கோவிலுக்குள் போகவு முடியாதே வீணுக நீசிதம்பரம் போவேனென்கின்ருய், சிச்சி சேரிக்குப்போடா! கழணிகாட்டைப் பாரடா!

நந்தனூர் எண்சீரடி விருத்தம்

மனங் கொண்டவிடமெல்லாம் போகாமலாணையிட்டு
மறித்து வாங்கி
அனல் கண்டமெழுகதுபோ·லெனதுள்ளந்தனலாக
உருகிச் சாய்க்கும்
புனல் கொண்டவேணியனைப் புண்ணியனைப் புராந்தகனைப்
போற்றி செய்யக்
கனங் கொண்டதில்லைநகர் போய்வருவேன்
கருணை வழிகாட்டுவீரே.

வசனம்

அடியேனென்செய்வேன் யாவும் சிவன் செயல், யான் முன்னமே உமக்குச் சொல்லியிருக்கின்றேனே. எனது மனவாக்குக் காயமனைத்தும் கனக சபாபதியாகிய நடாராஜர் பாதகாணிக்கையாக செலுத்திவிட்டேன். இனி எனது மனதின்படியே அடியேனை சிதம்பரத்திற்குப் போக விடையருள்வீர் சுவாமி.

வேதியர் வசனம்

இதென்ன ஆச்சரியம், யான் எவ்வளவோ நீதிவார்த்தைகளைப் புகன்றும் ஒரே பிடிவாதமாய் சிதம்பரத்திற்குப் போவேனென்கின்றனே! அடா நந்தா! உன் துகையில் தொழிலிருக்கின்றது என்னிடகழனி, கிணறு, மாடுமுதலானவையு மிருக்கிறது இவையனைத்தும் உனது சுவாதீனமாக விடுத்திருக்கின்றேன். நீநன்றாய் பயிரிட்டு ஜீவித்தால், எவ்வளவு சுகஜீவனஞ் செய்துக் கொண்டிருப்பாய் இவையனைத்தும் கவனித்துப்பார். இத்தனைநாளாய் மிகவும் நல்லவனென்று மதித்திருந்தேன். நீ எனது கழனியில் பயிரிடுவதற்கு வந்த நாள் முதற்கொண்டு.

விருத்தம்

கதிரொரு முழமே நீறுங் கட்டுமுக் கலமே காணும்
துதிபெறு நந்தா உன்கை தொட்டதே தங்கமாகும்
பதிதனிற் பெருமையான பறையனு யிருந்து தில்லை
சிதம்பர பித்தேன் கொண்டாய் சேரிக்குப் போடா போடா.

வேதியர் தரு.

இராகம் தனாசரி. தாளம்-ஆதி.

பல்லவி.

பித்தனாய்ப்போனதென்ன—நந்தா
பித்தனாய்ப்போனதென்ன

அநுபல்லவி.

எத்தனையோவித புத்திகற்பித்தும்
அத்தனையுமுன் கருத்திற்கொள்ளாமலே பித்த

சரணங்கள்.

சித்தமிப்படி செய்ததாரோ
பற்றுதலில்லாமல் பண்ணியபோரோ
பத்தியென்றுபே ரிட்டதாரோ
சித்தமிப்படியே சிலையிட்டதாரோ பித்த

எத்திசையும்புகழ் பெற்றிருந்தும்
வித்தைகளநேகம் விளம்பத்தெரிந்தும்
பத்தியோடுசார மறிந்தும்
கத்தனென்று நானுனக்கிருந்தும் பித்த

வசனம்.

நந்தா! நான் உனக்கு எத்தனைவித புத்தி சொன்னாலும் நீ மனதிற்கொள்ளாமல் பிதற்றிக்கொண்டிருக்கின்றாய். ஐயோ பாபம்! நன்றாயிருந்த உனக்கு பைத்தியம் பிடித்ததே, இந்த பைத்தியத்திற்கு தகுந்த மருந்து கொடுத்து சவுக்கியப் படச்செய்கின்றேன். இந்த சமயம் நீ உனது சேரிக்குப் போடா.

நந்தனார் விருத்தம்.

பித்தமது தெளிந்துவிட மருந்துண்டு
  தில்லைவனம் பேணிச் சென்று
சத்திசிவ காமிப்பெண் சந்நிதியில்
  நேராகத் தலை வணங்கி
தித்தியென்று நடனமிடுந் திருக்கோலங்
  கண்குளிரத் தெரிசித்தா லென்
பித்தமது தெளிந்துவிடும் வேதாந்த
  மழைசொரியும் பெரிய கோலே.

வ ச ன ம்

சுவாமி! தாங்களென்மீது கருணை கூர்ந்து சிதம்பர க்ஷேத்திரத்திற் கனுப்பினால் யான் நடராஜமூர்த்தியையும் சிவகாமியம்மனையும் நேத்திரானந்தமாய் தரிசித்து சிரமேற் கரங்குவித்து பூசித்தால எனது மனவிசாரமாகிய பித்தமயக்கம் விலகிவிடும் சுவாமி.

வேதியர் விருத்தம்

நாற்பது வேலிபூமி நடவுநட் டாகவில்லை
பார்ப்பது மில்லைசைவப் பரமது நின்றாய்ப்பண்ணை
காப்பது மில்லையுன்னைக் கைவிடமனது மில்லை
சேர்ப்ப தாலாவதில்லைச் சேரியிற்றொலைந்து போடா.

வசனம்

அடா! இனி யான் உனக்குச் சொல்லவேண்டிய தெல்லாம் சொல்லிவிட்டேன் இனி இங்கு காலதாமதஞ் செய்யாதே எனது நாற்பது வேலி பூமியிலும் பயிரிட்டு தான்யாதிகளை விளைவிப்பாய் போ! சீக்கிரம்.

[நந்தன் சேரிக்குபோகிறார்.]

2-வது—சீன்



[இடம்—பறைச்சேரி]

கதாநாயகர்:—பறையர்கள், நந்தனர், வேதியர்.

[நந்தன் வருவது.]

நந்தன் தரு

(ஹரதாகீஹரக்கும்சே) என்ற மெட்டு.

ஆதிவேதா ஜோதிப்ரகாசா
அனுதினம்நான் துதித் தேன்ஜெகதீசா ஆதி
சங்கரனேசிவா கங்காதரனே
சத்துசித்தானந்தா நித்தியானந்தா ஆதி
சிதம்பரத்தில்வந்துன் தரிசனங்கண்டுன்
பதம்பெறதிருவருள் புரிந்திடுவீரே ஆதி
கனகசபேசா காத்தருளீசா
ஜனகாதியர் துதி சைவப்ரகாசா ஆதி
சந்ததமுநதனை சிந்தித்தேன்ஈசா
கந்தசாமிக்கருள் கனகசபேசா ஆதி

பன்னிருவர் வசனம்.

நந்தன் சுவாமி! நமஸ்காரம். வருவீர்! வருவீர்!

நந்தனார் வசனம்.

சுவாமிகாள்! சிவானந்தமாயிருப்பீர்: யாவும் சிவன் செயல். அடியேன் சிதம்பர க்ஷேத்திரத்திற்கேகி நடராஜமூர்த்தியையும், சிவகாமியம்மனையும் நேத்திரானந்தமாய்தரிசித்து, சிரமேற்கரங்குவித்து, வாயாரப்பாடி ஆனந்த பரவசமடைய வேணுமென்று வேதியரைக் கேட்டேன், அவர் கொஞ்சமும் மனமிரங்கவில்லை. சிதம்பரத்திற்குப் போகாதே சேரிக்குப் போடாவென்று துரத்திவிட்டார். மனவிசாரமாய் வருகிறேன்.

பன்னிருவர் வசனம்.

சுவாமிகாள்! யாவும் பரமன் செயலே யாகும், இதைப் பற்றி விசனியாதீர். சிவானுக்கிரகமிருந்தால் சிவதரிசனந்தானே கிடைக்கும்.

நந்தனார் வசனம்.

சிவ! சிவ! சிவ! சிவ! சிவ!! (மவுனம்.)

[வேதியர் மறைவில் நின்று ஆலோசிப்பது.]

வேதியர் வசனம்

இதென்ன ஆச்சரியம்? தாழ்ந்த வகுப்பினரான புலையராயிருந்தாலும் சிவபக்தி யுண்டாகுமா? அடடா! என்ன ஆச்சரியம்? சரி! அவனை வரவழைத்து விசாரிப்போம். அடா நந்தா!

நந்தனார் வசனம்:—சுவாமி! நமஸ்காரம்.

வேதியர் வசனம்.

என்னடா! பக்தி முத்திவிட்டாற்போலிருக்கின்றதே; என்ன தலைகுனிந்து மவுனம் சாதிக்கின்றாய். நீ கெட்டதுமல்லாமல் இந்த பன்னிரண்டு பேரையும் வேலைசெய்ய விடாமல் சிவபஜனை செய்துக் கொண்டிருக்கின்றாய்,

நந்தனார் வசனம்.

சுவாமி! அவரவர்கள் சக்தியானுசாரம் பக்திசெய்துக்கொண்டிருக்கின்றார்கள். அதற்கு அடியேனென்செய்வேன்?

வேதியர் வசனம்.

அடா! பண்ணையாட்காள்? இன்று முதல் இந்த நந்தனுக்கு கஷ்டமானவேலைகளை செய்யச் சொல்வீர்கள், அவன் செய்யாவிட்டால் நன்றாய் அடித்து இம்சிப்பீர்கள்.

[நந்தனார் ஏர் உழுவதும், ஏற்ற மிறைப்பதும், நாற்று நடுவதும்.]

நந்தனார் விருத்தம்

இத்தனை நாட்களாக இதமுடனையர்முன்னே
பித்தனைப்போல் பிதற்றி பிரியமாய் பரமன்வாழும்
சித்திர சிதம்பரத்தை தெரிசிக்க வேணுமென்றே
எத்தனைவிதமாய் கேட்டும் ஏனென்னை யனுப்பவில்லை.

வசனம்

சிவ சிவா! ஜெகதீஸா! இனி யானென்ன செய்வேன்? சிதம்பர க்ஷேத்திரத்திற் சென்று கனகசபாபதியாகிய நடராஜமூர்த்தியை தரிசித்து விட்டு வருகிறேனென்று என்னை அடிமைகொண்ட ஐயரிடத்தில் யான் பலவிதமாய் வேண்டிக்கொண்டும் அவரென்னை அனுப்பாத காரணமென்ன? இதுவும் சிவன் செயல் தானோ? சரி! இந்த தடவைமாத்திரம் சிதம்பரத்திற் சென்று நடராஜ தரிசனங் கண்டு வருவேன் என்று கேழ்க்குறேன் அவர் அனுப்பாவிடில் பிராணனை விடுவேன்; இதுவே வைராக்கியம்.

[நந்தனார் வேதியர் வீட்டுக்கு போகிறார்.]

3-வது—ஸீன்.

[இடம்—வேதியர் வீடு]

கதாநாயகர்:—நந்தனர், வேதியர்.

—

[நந்தன் ப... கொண்டு வரு...து]

நந்தனர் தரு

(தில்லாந்திரி) வர்ணமெட்டு.

ஈசா ஜெக தீஸாபர மேஸா கைலாச...
நீசகுலத்திற் பிறந்த தோஷமிது தானோ   ஈசா

மாசிலாத மணியென்றுனை மனதில் துதித்தேனே
மறையோனென்னை சிதம்பரத்திற் கேகச்சொல்லுவானோ ஈசா

திருவாலங் காட்டில் காளியோடாடிய நின்பாதம்
சிறியேன்காண மறையோனென்னையனுப்ப வரந்தாரும்   ஈசா

97886

ஜனகாதியர் போற்றுந் திருவடி நடனங்கண்டு
மனமகிழ்வாய் நந்தா யென்று மறையோன் சொல்லுவானே

[நந்தனார் பாடிக்கொண்டு வருவதை வேதியர்
தூரத்திற நின்று பார்ப்பது.]

அந்தரத்தமரர் சித்தர் அன்பாய் துதிக்கும் நிதியே
கந்தசாமிக் கருள்தயாள கனகசபா பதியே ஈசா

வசனம்

நம: பார்வதி பதே! ஹர ஹர மஹா தேவா.

வேதியர் வசனம்.

என்னடா நந்தா! என்னேரமும் உன் தொந்தரையே பெரிதா யிருக்கின்றதே?

நந்தனார் வசனம்.

சுவாமி! சுவாமி!! உமது திருவாக்கினால் இந்த அடிமையை சிதம்பரம்போய் வருவாயென்று சொல்லவேணும் ஆண்டவனே.

வேதியர் விருத்தம்

சதமெனும் பயிர்கள்தன்னை சற்றேனுங் கவனியாமல்
சிதம்பரம் போவேனென்றுன் சித்தத்தில் வெறிநோய் கொண்டு
இதமுட னனுப்பென்றென்னை இம்சித்து கேட்குமிந்த
புதுமையென் னென் றுசொல்வேன் புலையர்கட் கடுத்திடாதே.

வசனம்

அடே நந்தா! என்னடா எந்நேரமும் உன் துன்பம் பெரிதா யிருக்கின்றதே; நாம் ஜீவிப்பதற் கிசைந்த அன்னகார சாராம்ஸமாகிய தான்யாதிகள் விளைவாகும் கழனியை கவனியாமல் என்னேரமும் என்முன்வந்து சிதம்பரம் போகவேண்டுமென்று அழுகின்றாயே நீயோன பிறகு கழனிவேலையை கவனிப்பது யார் மூடா! இனி அந்த வார்த்தையை வாயிலெடுத்துப் பேசாதே, சீக்கிரமாய்ப்போய் கழனியில் தான்யாதிகளை விளைவிப்பாய்.

நந்தனார் தரு

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மார்சழிமாதந் திருவாதிரைநாள் வரப்போகுதையே
பணைதடுல் ஞா ஞயனொருதரம் போய்வாவென் று சொல்லையே

கட்டையிருக்கையில் சிதம்பரம்போய்நான் காணவேணுமையே
கசடனாகிலும் ஆசைவிளையுதுன் காலுக்குக்கும்பிடையே
காலில்நகமுளைத்தநாள் முதலாயுமக் கடுமைக்காரனையே
காலபாசத்திற் காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலினில் வெள்ளெலும்பாட ஓடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கினதன்றியில்வேறே ஒன்றுங்காணேனையே
எட்டுமிரண்டுமறியாப்பேதைநா னெளியேனையே
இன்னந்தாய்வயிற்றிடையனாகாம லிடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடுந் தண்ணீர்குடித்திடும் வெறியேனையே
மேதினிதனிலே நாயினுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானதவங்களொன்றுங்காணா தடியேனையே
தளரவிடவேண்டாம் உந்தனுக்கொருகோடி தருமமுண்டையே
அல்லும்பகலுங்களாதரவாலே ஆளாகினேனையே
அன்புடனே நல்கதிபெறுவாயென் றனுப்பவேணுமையே

வசனம்.

சுவாமி! அடியேன் சதாகாலமும் தமது சமுகம் வந்து வந்து வருந்தி வருந்தி சிதம்பரம்போய் வருகிறேனென்று தங்களைக் கேட்கின்றேனே; இனியாகிலும் அடியேன் மீது மனமிரங்கி அடியேனை சிதம்பர க்ஷேத்திரத்திற் கனுப்பினால் இந்த மார்கழி மாதத்திய திருவாதிரை நக்ஷத்திரத்தில் கனகசபாபதியாகிய நடராஜமூர்த்தியை நேத்திரானந்தமாய்க் கண்ணுற்று, அடியேன் சிரமீது கரங்குவித்து அரஹர மஹா தேவா யென்று பூசித்து நேசித்து ஆனந்த பரவசமடைவேன் சுவாமி? சிதம்பரத்திற்கு அடியேனை அனுப்புவீர் தயாநிதியே.

வேதியர் தரு.

இராகம்-முகாரி, தாளம்-ஆதி

கண்ணிகள்.

மாடுதின்னும்புலையா உனக்கு மார்கழித்திருநாளோ
தேடியெடுத்த தாயாரிடத்தே போய்த்தீண்டாதேபோடா
ஆடுதின்னும்புலையா உனக்கு ஆனித்தரிசனமோ
நாடுசிரிக்கும் வார்த்தைகளன்றோ ராடாதேபோடா
நண்டுக்குக்கலியாணம் ஊளை நரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசை திருநாளுண்டோ பறையாநீபோடா
பூசைகள்செய்வாயோ ஆண்டவன் பொன்னடிதொழுவாயே
கூச்சல்போடாதேபோடா கூழைக்கும்பிடலாகாதோ

கங்கையிலாடுவையோ, அங்கே காணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிக்கடிவந்து இறையாதேபோடா
அஞ்செழுத்தோதுவாயோ உனக்கு ஆனந்தத்திருக்கூத்தோ
வஞ்சகவார்த்தைநாளைத் தெரியும்வாராதேபோடா

வசனம்

அடா நந்தா! நான் எவ்வளவு புத்திசொல்லியுங் கேட்கேனென்ருய், சேரிக்குப்போடா!

நந்தன் வசனம்

சுவாமி! நான் சிதம்பரம் போவேனென்ருல் நீர் சேரிக்குப் போடாவென்பதும் முன் ஜென்மத்தில் செய்த கன்மமா!

வேதியர் விருத்தம்.

வானிருந்த விடந்தேடிக் காணுமல் மாதவத்தோர் மதிமயங்கத்
தேனிருந்த செந்தாளைச் சிந்திப்பார் புந்தியுறத் தெளிந்தாரில்லை
ஊனருந்தும் புலையாநீ சிதம்பரத்தேசென்ருலு முண்டோமுத்தித்
தானிருந்த விடம்விட்டுப் போகாமல் சஞ்சலத்தைத் தள்ளுவாயே.

வசனம்.

அடா நந்தா! நான் உனக்கு எத்தனைதாஞ் சொன்னுலும் உனது சித்தத்தில் மதிக்காமல் நீயும் சிதம்பரம் போவேனென்று சொல்லலாமோ, அடா! சைவப் பிராமணர்களிருக்கும்படியான க்ஷேத்திரத்தில் புலையன் போகலாமா? நீ கொஞ்சமும் அஞ்சாத நெஞ்சுடையவனுய் அடிக்கடி என்னையாவந்து சிதம்பரத்திற்கு அனுப்புவாயென்று கேட்கின்ருய். துஷ்டா! எதிரில் இன்னமுமா நிற்கின்ருய்.

[வேதியர் நந்தனாரை கைசலிக்க அடிப்பதும், நந்தனார் மூர்ச்சித்துவிழுந்து எழுந்து பரிதாபமாய்ச் சொல்வது.]

நந்தனார் தரு.

இராகம் தண்டகம், தாளம் ஆதி.

பல்லவி

அடித்தது போதுமையா—என்னை
அடித்தது போதுமையா

அநுபல்லவி

அடித்தாலுமுங்கள் கைவலிக்காதோ
அடிமையான யென்னுடன்வாதோ
படித்ததெல்லாமென் மனதிற்படாதோ
பாவியெனக்குமினி மேற்நெறியாதோ அடித்

சரணங்கள்

நல்லவரேயுங்கள் மனதுப்ரகாரம்
நடக்காமலிருந் ததுமபசாரம்
சொல்லத்தெரியுமோ யெனக்குபசாரம்
சுகிர்தசாலியுங்களாலே யிந்நேரம் அடித்

வசனம்

சுவாமி! தாங்கள் அடியேனை அடிக்கவுஞ் சொந்தம், ஆதரிக்கவுஞ் சொந்தம், தாங்களென்னை அடித்துக்கொன்றாலும் தங்களைத் தடுப்பவர் யார்? சுவாமி! சைவ பிராமணர்களும் தில்லை மூவாயிரவரும் நடராஜ பெருமானைச் சூழ்ந்துவரும்போது யான் அருகில் நெருங்கு வேனோ தலைதூரத்திலிருந்து "நடராஜபெருமான் நகர் வலம்வரும் போது" நான் நேத்திரானந்தமாய் சிரமேர் கரங்குவித்தாதரிசனஞ் செய்து விட்டுவருகிறேன், அனுப்புவீர் சுவாமி?

வேதியர் விருத்தம்.

கார்த்திகை மாதம்வந்தும் கழனியிற் பயிர்செய்யாமல்
தீர்த்தயாத்திரை நீசென்று சிதம்பர நடேசர்தன்னை
பார்த்துவிட் டிவிடம்வந்தால் பயிரெல்லாம் விளைந்துபோமே
சீர்திகழ் சம்பாநெல்லை சீக்கிரம் விதைத்துப்போடா.

வசனம்

அடே நந்தா! இனிமேல் உனக்கு பல பலவிதமாய்ச் சொல்வதினுற் பிரயோசன மில்லை. கார்த்திகை மாதம் பிறந்து இதுவரையிலும் கழணியில் ஒருவேலையும் நடக்க வில்லையே, நீசிதம்பர க்ஷேத்திரத்திற்குப்போய் நடராஜனைப் பார்க்கப்போனால் நமது வயலில் தான்யங்கள் தானாய் விளைந்து விடுமா? இனிமேல் என்முன் வராதே! நீ இச்சமயமே கழணியிற் சென்று நமது நாற்பது வேலி பூமியிலும் சம்பா, காரு,சிறுமணி, மணக்கத்தை,நீலஞ்சம்பா, சொர்னவாரி முதலான நெற் பயிர்களையும் இன்னும் பலவிதமான தான்யாதிகளையும் விளைவித்து உனது இனத்தாருடனே சுகமாயிருப்பாய் போடா!

[நந்தனார் சேரிக்குப் போவது.]

4-வது ஆக்ட்

1-வது—சீன்.



[இடம்—பறைச்சேரி]

கதாநாயகர்:—நந்தனர், பன்னிருவர், பறையர்கள், பரமசிவம்.

[நந்தனர் மனவிசாரமாய் சேரியில்
வந்து சிவத்யானஞ் செய்வது.]

நந்தனர் தரு

இராகம்-முகாரி, தாளம்-ஆதி

பல்லவி

ஐயாபரமசிவானந்தா சர்வேசனே
ஐயையோயானென் செய்வேன் ஐயா

அநுபல்லவி.

பையரவணிந்திடும்பரனே கங்காதரனே
வையமிசை யென்முனே வந்தருள் சங்கரனே ஐயா

சரணங்கள்.

அந்தணரெந்தனை அடித்து தூரத்திவிட்டான்
அடியேன்சிதம்பரத்திற்கு போகாமல்வந்துவிட்டேன்
சிந்தைவருந்தியேசிவனேயென் றழைத்திட்டேன்
கந்தசாமிக்கருள்காருண்யா துதித்திட்டேன் ஐயா

சிவ சிவா! தவயோகிகள் சதாகாலமும் துதிபுரியும் சர்வேஸ்வரனே! தயாநிதியாகிய உமது தரிசனங் காண்பதற்காக யான் சிதம்பரத்திற்குப் போகவேணுமென வெகு பிரயாசையுடன் எனதுஆண்டையாகிய வேதியரைக் கேட்டும் பிரயோசனமில்லாமற் போய்விட்டதே! இனி என்ன செய்வேன், கார்த்திகை மாதமும் பிறந்துவிட்டதே இனிமேல் யான் நாற்பதுவேலி பூமியிலுள்ள கழனிகளை புழுதியாக்குவ தெவ்விதம்? விதை விதைப்ப தெவ்விதம், பயிராகச் செய்வதெவ்விதம், மார்கழிமாதம் சமீபத்தில் வருமே, இன்னும் பதினைந்து நாள்தானே திருவாதிரை யுற்சவம், இதற்குள் யான் சிதம்பரத்திற் சென்று சிவ தரிசனங் காணமுடியுமா? ஆ! சிவ! சிவ! சிவ!!

[நந்தனர் யோகநிஷ்டை.]

பரமசிவம் ரிஷபவாகனரூடராய் வந்து நந்தனருக்கு சொல்வது.

விருத்தம்.

அன்புள்ள நந்தாஉந்தன் ஐயர்பாற் சென்றுநீதான்
நன்மையாய் மதியுரைத்து நானிலத்தோர்கள் மெச்ச
சின்மயானந்தமாக சிதம்பரக்ஷேத்ரம்வந்து
உன்மனமகிழ்ந்துநீயும் உண்மைசேரருள்பெற்றுய்வாய்

வசனம். சதா சிவத்யானமாயிருக்கும் நந்தனரே இனி நீ அஞ்சாதே உனது எஜமானாகிய வேதியர் உத்திரவின்படியே உனக்கு ஆக்ஞாபித்த நாற்பதுவேலி பூமியிலுமுள்ள கழனிகளில் சிவகணங்கள் நெல், கேழ்வரகு முதலாகிய நவதான்யாதிகளை விசேஷமாக பயிரிட்டு விட்டார்கள் இனி நீ உனது எஜமானாகிய வேதியரை அழைத்துவந்து கழனியின் விசேஷத்தைக் காண்பித்துவிட்டு நீ உடனே சிதம்பரத்திற்குவந்து சேருவாய்.

[பரமசிவம் மறைந்தார். நந்தன் கண்விழித்து பார்த்து ஆச்சரியப்படுவது.]

நந்தனர் வசனம். ஓம் சிவ! சிவ! சிவ! சிவ! சிவ! சிவா!

பறையர்கள்வசனம். எண்டா நந்தா தூங்கியெழுந்து என்னென்னமோ பினற்றுகின்றாயே எனடா கனவு கண்டாயோ பைத்திய நினைவோ? செல்றா யெம்மவனே!

பன்னிருவர் வசனம். அடா மூடர்களே! அப்பாற் செல்லுவீர் அவரை என்னென்று மதித்து விட்டீர்கள்.

பறையர்கள் வசனம்

சரி! சரி!! நீங்கள் வந்தீர்களோ மஹாபுத்திசாலிதான், நநதனே பைத்தியக்காரன், நீங்களும் அவனைச்சேர்ந்த கால்வெறியர், அரை வெறியர் முக்கால் வெறியரென்றால் அவன் முழுவெறியன் தெரியுந் தான் தெரியாதோ.

பெரியகிழவன் வசனம்

அடே மூடர்களே! என்னடா புத்தியில்லாமல் பேசுகின்றீர்கள் தூரத்திலேகுவீர், சுவாமி நநதனாரே! என்னமவுனஞ் சாதித்திருந்த விதமாகவே என்னென்னமோ சொன்னீரே அதென்ன சுவாமி!

நந்தனார் வசனம். சுவாமிகாள்! யான் கண்ட கனவினைச் சொல் லுகின்றேன் கவனிப்பீர்.

நந்தனார் தரு.

லாவணி (மாரனேரிந்திலனே) என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

அன்பிற்கிசைந்தயென் அறிவுள்ளநேசரே
ஆனந்தநித்திரை செய்தேனே—அப்போ
நன்மனதாயீசன் என்கனவில்தோன்றி
நந்தாநீ சிதம்பரம் வந்திடென்றார் அன்பிற்
வேதியர்சொன்னதெல்லாம் ஓதினேன்சிவனிடம்
வேலிநாற்பதும் பயிர் விளைந்ததென்று—நீ
ஓதிவிட்டையரிடம் உத்திரவுபெற்று
உடனே சிதம்பரம் நடந்திடென்றார் அன்பிற்

வசனம். சுவாமிகாள்! யான் வேதியரிடத்திற் சென்று சிதம் பரத்திற்குப்போய் வருகிரேனென்று கேட்டதற்கு அவர் நாற்பது வேலி கழனியிலும் பயிரிட்டுவா யென்றார். யான் மனந்திகைத்து ஒன்றுந் தோன்றாமல் மதிமயங்கி உட்கார்ந்தபடியே நித்திரைசெய் தேன் பரமசிவம் ரிஷபவாகனரூடராய் என்முன் பிரசன்னமாகி நந்தனாரே! ஐயர் சொன்னபடியே நாற்பது வேலியிலுள்ள கழனி யில் தான்யாதிகள் பயிராய்விட்டது உடனே நீ வேதியரிடந் தெரி வித்துவிட்டு சிதம்பரத்திற்கு வருவாயென்று கருணைபுரிந்தார்.

பெரியகிழவன் வசனம்.

ஆ! அப்படியோ? சரி வாரும் நாமனைவரும் போய்பார்த்து வருவோம் வருவீர். [சகலரும் போவது.]

நந்தனார் வசனம்.

சிவ! சிவ! யாவும் பரமசிவன் செயல்? யான் இச்சமயம் ஐய ரிடஞ் சொல்லிவிட்டு வருகிறேன். [நந்தன் போகிறார்.]

2-வது—சீன்



[இடம்—வேதியர் வீடு]

கதாநாயகர் — நந்தன், வேதியர்.

[நந்தன் பாடிக்கொண்டே வருவது.]

தேவாரம்.

நந்தன் தரு.

(மாழ்றரியாத செழும்பசும் பொன்னே) என்ற வர்ணமெட்டு.

சங்கரானந்தா சதாசிவ நாதா
திங்களணிந்திடும் தேவா பிரக்யாதா
எங்கும் நிறைந்திடும் ஏழைபங்காளா
துங்கமான் மழுவேந்தும் துய்யகங்காளா

வசனம்.

நமப் பார்வதி பதே! ஹர ஹர மஹா தேவா.

[வேதியர் ஆலோசிப்பது.]

வேதியர் வசனம்.

ஈதென்ன ஆச்சரியம்! நேற்றையதின மிவனை அடித்து கஷ்டப் படுத்தி கழனியில் பயிரிடச் சொல்லி அனுப்பினேனே, பொழுது விடிந்தவுடனே மறுபடியும் ஓடிவந்து விட்டானே அருகில் வரட்டும் விசாரிக்கலாம்.

நந்தனார் வசனம்

சுவாமி! தமது உத்திரவின்படியே நாற்பதுவேலியிலுமுள்ள கழனிகளில் தான்யாதிகள் விளைந்து விட்டது என்னை சிதம்பர க்ஷேத்திரத்திற் கனுப்புவீர் சுவாமி.

வேதியர் வசனம்

இதென்னடா! உன் துன்பம் என்னேரமும் தொந்தரையாயிருக் கிறது, நீயோ புலையன் வேத வேதியர் சதானந்தமாய் துதிபுரிந்து பூசிக்கும் நடராஜர் வாழும் சிதம்பர க்ஷேத்திரத்திற்குப் போகிறே னென்று வாதாடுகின்றாய், உங்களுக்கு தான் காத்தான், கறுப்பன், இருளன், மாடன், பாவாடை ராயன் முதலான மதுமாம்ஸபக்ஷ தெய்வங்களெல்லா மிருக்கின்றதே அதைவிடுத்து சைவசமயாசாரத் தைக் கட்டிக்கொண்டேன் அழுகிறாய்.

நந்தன் வசனம்.

சுவாமி! ஆதியில் சிவபெருமானால் உண்டாகிய சைவசமயமே சிறந்ததென்று தானே சதுர்வேதங்களில் முறையிடுகின்றது. அவ் விதமாய் சிறப்புற்றோங்கிய சைவ சமயாசார க்ஷேத்திரமாகிய சிதம் பரத்திற் சென்று எவர்களையும் தீண்டாமல் தூரத்திலிருந்தவித மாகவே சுவாமி தெரிசனஞ் செய்துவிட்டு வருகிறேன் சுவாமி!

வேதியர் வசனம்.

சரி! அவ்விதமானால் நாற்பதுவேலிகள் அடங்கிய எனது கழ ணிகளில் தான்யாதிகளை விதைத்துப் பயிராக்கிவிட்டுப் போடா!

நந்தனார் வசனம்

சுவாமி! தமது திருவாக்கின்படியே சிவபெருமான் கிருபை யால் நாற்பது வேலியிலும் தான்யாதிகள் விளைந்து விசேஷமாய்ப் பயிராய் விட்டது சுவாமி! இனியாகிலும் அடியேனை சிதம்பரக்ஷேத் திரத்திற் கனுப்புவீர்.

வேதியர் வசனம்.

உனக்கென்ன பைத்தியமா? நேற்றையதினமெல்லாம் என்னிடத்தில் வாதாடிவிட்டு சாயங்காலம் வீட்டுக்குப்போய் இராத்திரியில் நாற்பதுவேலியிலும் தான்யாதிகள் விளைந்துவிட்டதென்று சொல்லுகின்றாயே; உனக்கென்ன உன்மாதமா?

வேதியர் தரு.

இராகமாலிகை வராளி, தாளம்-ஆதி.

பல்லவி

நந்தாஉனக் கிந்தமதி வந்ததென்ன தந்ததாரடா
அந்தரங்கஞ்சொந்தமா யிருந்தது மறந்துபோய்
விந்தையாய் நினைந்ததன்றோ அந்தவேளைபுத்தியில்லை நந்

தோடி.

கொல்லைக்காட்டி நரிபோல பல்லைக்காட்டி பேசுறாய்
கல்லைக்காட்டி கோபங்கொண்டு சொல்லைக்காட்டிபேசுவேன்
இல்லையென்று சொன்னதெல்லா மில்லையென்று போச்சுதா
கல்தானென்று ஐயர்சொன்ன சொல்லேநிஜமாச்சுதா

சித்தமுந் தெளிந்ததா உற்றது முணர்ந்துதா
பத்தியுந் தொலைந்ததா கத்தலும் பறந்துதா

சட்டம்-சட்டம்-நல்லது-நல்லது மெத்த-மெத்த-சந்தோஷம்

மத்தியமாவதி.

இப்படி அப்படி சொல்லாதே தப்பெடுத்தடிப்பையா
சொற்படி யொப்புதலாகநீ மெய்ப்படி நடப்பையா

கள்ளக்கும்பிடு தள்ளடா காரியங்கைக் கொள்ளடா
எள்ளுக்கொல்லைக் காரடா எங்குஞ்சுற்றிப் பாரடா

தெய்வமென்பது குற்றம் தெளிந்துபாரு சுற்றம்
கையைக்கொட்டு சத்தம் கண்டுகொள்ளு நித்தம்

ஊணுறக்கமே யின்பம் ஊணிழந்தாலே துன்பம்
ஜாண்வயற்றுக்கு அன்பு ஜாதிமுறைமை வம்பு

ஓஹோ-பலே-பலே சபாஷ்-கண்டுகொண்டாய்

கேதார கௌளம்.

சூதாடி தோற்றவன்போல் வாதாடி நிற்பதற்கு
வேதாந்த சாஸ்திரங்கள் காதாலே கேட்டிருந்தும்
என்னகாரியம் அதிலென்ன வீரியம்-தள்ளு-தள்ளு

புன்னாகவராளி.

தில்லையென்பது காட்டிலுண்டு கேட்ட தில்லையா
தேகம்பட்டால் புண்ணாகும் பார்த்த தில்லையா
அம்பலமாவது ஆகாசம் உற்றுப்பாரு
அருளில்லை பொருளில்லை கண்டுசேரு
பத்தியென்றும் சித்தியென்றும் வெற்றியென்றும் முத்தியென்றும்
இத்தனைநாள் கற்றகலை அத்தனையும். பித்தமாச்சு
மாறுபாட்டுக்காரன் வார்த்தை கூறுபடுமோ
தாறுமாறு பேசினதால் சோறுபோடுமோ நந்

நந்தனார் வசனம்.

சுவாமி! தாங்கள் அடியேன்மீது இவ்விதமாய்க் கோபித்துக் கொண்டாலும் சரியே! அடித்துதைத்தாலும் சரியே! தாங்கள் திருவாய் மலர்ந்தருளிய விதமே • நாற்பது வேலிகளடங்கிய தமது நன்செய் புன்செய் கழனிகளில் பரமசிவன் திருவருளால் தான்யாதிகள் விளைந்து பயிரா யிருக்கிறதையாகிலும் நேத்திரானந்தமாய்ப் பார்த்துவிட்டு அடியேனை சிதம்பர க்ஷேத்திரத்திற் கனுப்பும் சுவாமி!

வேதியர் வசனம்

அப்படியா! இதோ வருகிறேன். ஓரிரவிற்குள் நாற்பதுவேலியிலும் தான்யம் விளைந்து தென்றால் ஆச்சரிய காக்ஷியே யாகும்.

[வேதியர் நந்தனாருடன் வயலைக்காணப் போவது.]

3-வது—ஸீன்.



[இடம்—கழனி.]

கதாநாயகர்:—வேதியர், நந்தனர்.

—

[வயல்களில் எங்கு பார்த்தாலும் தான்யாதிகள் விளைந்திருப்பது.]

வேதியர் வசனம்.

ஆ! ஹா! ஈதென்ன ஆச்சரியம்? நந்தனரே! நேற்றையதினம் இந்த வயல்களெல்லாம் காய்ந் துலர்ந்திருந்ததே இப்போதென்ன எங்கு பார்த்தாலும் பலவித தான்யாதிகளும் பசுமையாய் விளைந்து கதிர்கள் விசேஷமாய்ப் பருத்திருக்கின்றதே. இதனுண்மையை அடியேனுக்குச் சொல்லவேண்டும் சிவபக்தரே!

நந்தனார் விருத்தம்

அன்புட னெனையாட் கொண்ட ஐயனே சிதம்பரத்தில்
இன்புட னனுப்புதற்கு ஈசனே துணைசெய் யென்றேன்
சின்மயா னந்தஜோதி சிவகணங்கள் தன்னாலே
நன்மையாய் பயிர்கள்செய்து நலமுடன் கனவில் சொன்னார்.

வசனம்

சுவாமி! நாற்பது வேலியிலும் தான்யாதிகள் விதைத்து பயிரான பிறகு தானே சிதம்பரம் அனுப்புவீரென்று மன விசாரமாயிருந்து நித்திரை செய்து விட்டேன். பரமசிவம் கனவில் வந்து நந்தா! உனது ஆண்டையின் சொற்படியே நாற்பது வேலியிலும் நமது சிவகணங்கள் வந்து ஏற்றமிறைத்து பூமியை புழுதியாக்கி ஏருழுது தான்யாதிகளை விதைத்து பயிராகச்செய்து விட்டார்கள் நீ வேதியரிடம் தெரிவித்து சிதம்பர க்ஷேத்திரத்திற்குச் சீக்கிரம் வருவாயென்று தெரிவித்தார், சுவாமி.

வேதியர் தரு

(கழுத்தில் விழுந்தமாலை) என்ற வர்ணமெட்டு.

சிவபக்தர்மகிமை தெரியாமல்யானே
செய்தகுற்றமனைத்தும் பொறுப்பீரே

நந்தனார்

அவனியிலந்தணர் குலசிகாமணியே
அடியேனை சிதம்பரமனுப்புவீரே

வேதியர்

சிவோபதேசஞ்செய்தெனக்குச் சிதம்பரம்போவீர்

நந்தனார்

பவமகற்றியோகநிலை தவனையனுஷ்டிப்பீர்

வேதியர்

ஜன்மசாபல்ய மானேன்யானே

சிவ

[நந்தனார் சிதம்பரம்போவது.]

5-வது ஆக்ட்

1 வது—சீன்.

[இடம்—கொள்ளடக்கரை]

[நந்தனர் பாடிக்கொண்டு வருவது.]

நந்தனர் தரு

(வங்காரமார்பிலணி) என்ற வர்னமெட்டு.

சிங்காரவாவிகளும் சோலைகளுஞ்சூழ்ந்திலகும்
மங்காதகீர்த்திபெறும், மாநதிகொள்ளடக்கறையில்
தங்காமலோடமதிலேறியக் கரையணுகிவந்தேனே
எங்கோன்சிவனடியைக் காண்பேனெனபவமகற்றி
துங்கமழுமான்தரித்து துய்யசிவன்தன்னருளால்—இனியானே

வசனம்

இதோ! நாம் கொள்ளடக்கரையைத் தாண்டி வந்துவிட்டோம். அதோ! தில்லைச் சிதம்பரத்தின் கோபுரந் தெரியுது.

நந்தனார் தரு

இராகம்-தண்டகம், தாளம்-ஆதி

பல்லவி

கோபுர தெரிசனமே எந்தன் பாபவிமோசனமே கோபுர

சரணங்கள்

தாபங்கள் மூன்றும் தணிந்துவிடும் நல்ல
சோபன முண்டாஞ் சோதி விளங்கிய கோபுர

விண்ணளந்துமே லோங்கியே கண்டுநற்
கண்ணுளார்க் கெல்லாங் காக்ஷியளித்திடும் கோபுர

அல்லும் பகலும் அமரர் துதித்திடும்
தில்லைக்கிறையோன் தினமு மகிழ்ந்திடும் கோபுர

வசனம்

சிவ! சிவ! சிவ! சிவ! ஜெகதீஸ்வரா? அடியேனுடைய ஜனனமரண பவபந்த சாகரத்தைத் தாண்டி ஜீவன் முக்தனைகச்செய் வதற் கிசைந்த தில்லைச் சிதம்பரத்தின் கோபுரதரிசனங்கண்டு மன மகிழ்ந்தேன். ஆ! ஹா! அதென்ன சப்தம் அருகிற்சென்று கவ னித்துப் பார்ப்போமா? ஓ! ஹோ! கவனித்தேன்? கவனித்தேன்? சிதம்பரக்ஷேத்திரத்திற் கொலுவமர்ந்திருக்கும் நடராஜருக்குப் பூஜை நடக்கின்முர் போற் காண்கிறது.

நந்தனார் தரு

இராகம்-காகாப் பிரியை, தாளம்-ரூபகம்.

பல்லவி

கெண்டாமணியாடுது கண்டுபிணிவாடுது

சரணங்கள்.

முத்துமணிதேடுது நாடுது கூடுது கெண்
பரவசமாகுது பாவங்கள் போகுது கெண்
ஜெனன மரணாதிகள் மோகமுந் தீர்ந்தது கெண்

வசனம்

சிவ! சிவ! பரமேஸ்வரா? உமது கிருபையினல் சிவபூஜை யின் கண்டாமணி யோசையை எனது காதாரக் கேள்வியுற்றுக் களிப்படைந்தேன். இனி உமது ஆலயம் அமைக்கப்பட்டிருக்கும் தில்லைச் சிதம்பரத்தை நேத்திரானந்தமாய்க்கண்டு மனமகிழ அருள் செய்வீர்.

[நந்தனார் போகிறார்.]

2 - வது—சீன்



[இடம்—சிதம்பரக்ஷேத்ரம்]

[நந்தனார் கொண்டானடித்து கூத்தா
டிப் பரமசிவனை பாடிப் புகழ்வது.]

நந்தனார் தரு.

இராகம்-பியாகு, தாளம்-ஆதி.

பல்லவி

இதுதானோ தில்லைத்தலம்
இத்தனைநாளு மறியேன்　　இதுதானோ

சரணங்கள்

அதுவோ யிதுவோவென்　　நலைந்திடும் பேயனுக்கு
கதிதருவேனென்று　　கைகாட்டி யழைத்திடும் இது

காசினியிலிதைக்　　கைலையென்றெல்லோரும்
பேர்கேட்டதேயன்றி　　பேணிப்பார்த்தறிந்திலேன் இது

நந்தனார் வசனம்

நாம் இத்தனை நாளாய் இந்த சிதம்பரக்ஷேத்திரத்தைக் காணாமல் புலையர்கள் சூழும் பறைச்சேரியிலிருந்து "வழிதெரியாத குருடன் வாயில்வந்தபடி உளறுவதுபோல" என்னென்னமோ யோசித்துக்கொண்டிருந்தோம், தற்சமயத்தில் நடராஜமூர்த்தியின் கிருபையால் சிதம்பர க்ஷேத்திரத்திற்கு வந்தோம், இனி முற்றிலும் சுற்றிப் பார்ப்போம்.

[நந்தனார் சிதம்பரத்தின் வீதிகளை யெல்லாம் சுற்றிப் பார்க்கின்றார்]

நந்தனார் தரு.

இராகம்-தேசிக தோடி.

பல்லவி.

இதுவோ தில்லைச்சிதம்பர க்ஷேத்திரம்
ஈசனிருப்பிடமோ இதுவோ

சரணங்கள்.

மதுரம் பொழிந்திடும் மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தவம் புரியும் பெருமிடம் இது

பதவிபெறுந் தொண்டர் பணிந்துவருமிடம்
பலதெய்வமுந் தொழுது பரகதிபெறுமிடம் இது

வசனம்.

ஆ! ஹா! இந்தச் சிதம்பர க்ஷேத்திரத்தைக் காணக் காண நேத்திரானந்தமா யிருக்கின்றதே, இதுதான் பிராமணர்கள் வசிக்கும் வீதி, இங்கிருக்கும் வீடுகளெல்லாம் தேவலோகத்திலிருக்கும் வீடுகளாகவும், பெண்களெல்லாம் தேவதா ஸ்திரீகளைப்போலவும், புருஷர்களெல்லாம் தேவர்களைப் போலவும், திருமேனியில் விபூதியணிந்து, ருத்திராக்ஷ மாலைகளை சிரசிலும் மார்பிலு மணிந்துகொண்டு சதா காலமும் வேதகோஷ்டத்தை உச்சரித்துக்கொண்டு, அர ஹர! சிவ சிவாவென்று துதிபுரிவது ஆனந்தமாயிருக்கின்றது. இன்னும் சற்று நேரம் இந்த க்ஷேத்திர முழுதும் சுற்றிப் பார்ப்போம்.

நந்தனார் விருத்தம்

தில்லையைக் கண்டபோதே தெளிந்ததென் னுள்ளமெல்லாம்
பல்லூழி காலஞ்செய்த பாழ்வினை தொலைந்து போச்சு
நல்லருள் நடனங்காட்டும் நாயனார் சிற்சபைக்குள்
செல்லுவார் மகிமைசொல்ல சேடனு லாகாதென்றே.

வசனம்

சிவ! சிவா! இந்த தில்லைச் சிதம்பரத்தை கண்டபோதே என துள்ளம் ஆனந்த பரவசமடைந்து ஜனனங்கள் தோறுஞ்செய்த பாவ

விமோசனமாகி சிவானந்தமா யிருக்கின்றேனே, ஆலயத்திற்சென்று திருநடனஞ்செய்து சிவபக்தர் மனமகிழ அருள்புரியும் நடராஜமூர்த்தியை நேத்திரானந்தமாய் தரிசிப்பவர்கள் மகிமையை ஆயிரம் நாவுபடைத்த ஆதிசேடனாலுஞ் சொல்ல முடியுமோ.

நந்தனார் தரு.

இராகம்-சங்கராபரணம், தாளம்-ரூபகம்.

பல்லவி

ஆடியபாதா இருவர்கள் நாடும் விநோதா

அநுபல்லவி.

ஆடியபாதா அயனும் மாலுந்தினம்
தேடியுங்காணுமற் றிரைமறவாக
தித்தித் தித்தித் தித்தித் தீமென ஆடி

சரணங்கள்

வீரவெண்டையுஞ் சிலம்பசைந்திட
மேவுஞ்சடையும் புலியசைந்திட
சாருந்தொண்டர்கள் மனங்குவிந்திடச்
சாலோகபதவியுந் தந்தோம் தந்தோம் தோமெனநடனம் ஆடி
வேதமுனிகள் பாடவும்
ஜனகாதி யோகிகள் ரிஷிகள் கூட்டவும்
நாதமெங்கிலும் மூடவுந்திரு
நந்திமத்தளம் போடவுந் தகுந் தகுந் தகுந் தகு மென்று ஆடி
பாலகிருஷ்ணன் துதிகள் செய்திடப்
பண்ணவர்கள் பூமாரிபெய்திட
சிலமுள்ள சிவ காமி மகிழ்ந்திடத்
திருச்சிற்றம்பலத்தரசனுந் தாந் தாந் தாந் தாந்தாமென்று ஆடி

வசனம்

அன்பர்கள் மனங்களிக்கத் திருநடனமாடிய நடராஜ மூர்த்தியின் திருவடியை அடியேன் நேத்திரானந்தமாய்க் கண்டு தரிசனஞ் செய்ய ஆசையுடையவனா யிருக்கின்றேன். ஆனால், கனக சபாபதியின் சந்நிதானத்திற்குள் எவ்விதமாய்ச் செல்வேன், அடியேன் அவ்வளவு புண்ணிய பலன் செய்யாமலிருந்தாலும், பரமசிவனை வேண்டிக்கொண்டாலும் அடியேனை ஆலயத்திற்குள் வருவதற்கு அனுக்கிரகஞ் செய்வாரா?

நந்தனார் தரு.

இராகம்-மாஞ்சை, தாளம்-ரூபகம்.

பல்லவி.

வருகலாமோ ஐயா—உந்தன்
அருகினில் நின்றுகொண்டாடவும் பாடவும்—நான் அங்கே

அநுபல்லவி.

பரமகிருபாநிதியல்லவோ இந்தப்
பறையனுபசாரஞ் சொல்லவோ—உந்தன்
பரமானந்தத் தாண்டவம் பார்க்க நான் அங்கே வருக

சரணகள்.

பூமியில்புலைபனுய்ப் பிறந்தேனே—நான்
புண்ணியஞ்செய்யாம லிருந்தேனே
சாமியுன்சந்நிதி வந்தேனே—பவ
சாகரத்தையு மிழந்தேனே
கரை கடந் தேனே சரணமைடந்தேனே—தில்லை
வரதாப்ர பாபமுந் தீர நான் அங்கே வருக

வசனம்

பரமசிவமே! அடியேன் ஆலயத்துட் பிரவேசித்துத் தமது திருவடி தரிசனங் காண்பதற்கு அனுக்கிரகம் புரிவீரெனவேண்டினேனே அடியேனைக் கைவிடாமல் ஆலயத்தி லழைத்துச் செல்வீராகில் அம்பலவாண தரிசனங் கண்டு ஆனந்த பரவசமடைவேன் சுவாமி! ஆனல், அடியேன் தமது சந்நிதானத்திற்கு வருவதறகிசைந்த புண்ணியஞ் செய்திருக்கின்றேனே? பரமசிவமே!

நந்தனர்- தரு.

இராகம்- தண்டகம், தாளம்- ஆதி.

பல்லவி.

சந்நிதி வரலாமோ—சுவாமி—தரிசனம் பெறலாமோ சந்நிதி

சரணங்கள்.

இல்லறவாழ்வான்மூடி இருந்தேனென்றுமிகவாடி
அல்லும்பகலுங் கொண்டாடி அறியேன் கனகசபைநாடி சந்நி

வீதியிலேசற்றே வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் டிருந்தேன்
சாதியிற்றாழ்ந்தவனென் றறிந்தேன்
தனித்திருப்போமின்றிங்கே வந்தேன் சந்நி

காலால்வீசிக் கனல்மூட்டி
கலைமதிமண்டபமே லோட்டி
பாலாறுபெருகவே யெனைக்கூட்டி
பார்த்ததுமில்லை நான்தோட்டி சந்நி

[இவ்விதமாய் நந்தனர் பாடிக்கொண்டே யோகநித்திரைசெய்து சொற்பனங் கண்டெழுந்திருப்பது.]

நந்தனர் தரு.

இராகம்-சூரியகாந்தம், தாளம்-சாப்பு.

பல்லவி.

கனவோ நினைவோ கண்டது வீணே
மனதிலுறுதிகொள்ள வழியொன்றுங்காணேன் கன

நித்திரை தனிலொரு சித்தனுருவாய்வந்து
முத்தித் தருவேனென்று நத்திப்பேசினதுண்டு கன

ஆருமிகழ்ந்துதள்ளும் நாறும்புலையனென்னை
வாரும் பரமபதஞ் சேருமென்றழைத்தது கன

கிட்டிநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்ட வெளியைக்காட்டி கட்டளையிட்டது கன

வசனம்.

பரமசிவமே! யான் கனவில் கண்டபடியே தாங்களென்முன் வந்து காக்ஷிதந்து கனக சபையிலழைத்து சாயுஜ்யபதவி தருவீரோ?

நந்தனர் தரு.

இராகம்-சஹானா, தாளம்-ஆதி.

பல்லவி.

கனவில்வந்துரைத்தாற்போல்
காக்ஷிதந்தழைப்பாயோ—கனகசபாபதியே கனவில்

அநுபல்லவி

ஜனகாதியர்களுடன் தவமுனி ரிஷிகளும்
மனமகிழ்வாய்பூஜிக்கும் பரமசிவனேயெந்தன் கன

சநதிராதிந்தியர் சதுர்மறை புகழ்ந்திடும்
சத்துசித்தா னந்தமே கன

கந்தசாமிக்கருளும் கர்த்தனே சிவனேயென்
சிந்தைமகிழவந்து தெரிசனந் தந்தாற்போல் கன

வசனம்

பரமசிவமே! அடியேன்மீது மனமிரங்கி அடியேனுடைய கனவில்வந்து காக்ஷி தந்தவிதமாகவே நேரில்வந்து நந்தா! கனகசபையில் வந்து சாயுஜ்யபதவி யடைவாயென்று அழைத்துச் செல்லுவீரையா பரமசிவமே!

திருச்சிற்றம்பலம்.

[நந்தனர் சிவத்யானமாயிருப்பது.]

3-வது—வீதி.



[இடம்—பிராமணவீதி.]

கதாநாயகர்:—தில்லைமூவாயிரவர் அர்ச்சகர்.

[பரமசிவன் அர்ச்சகர் கனவில்சொன்ன விசேஷத்தை சகலருக்கும் தெரிவிப்பது.]

அர்ச்சகர் விருத்தம்.

அன்புறும் சிவத்தைநாடி அனுதினம் பூஜிக்கின்ற
நன்மைசேர் நந்தன் யென்னு நாயனுரொருவர்வந்து
இன்பமா யக்யமாக இருப்பதால் நாமெல்லோரும்
தன்மையா யழைக்கவென்று சங்கரன் சொன்னுரையா.

வசனம்

தீக்ஷதர்காள்! யான் நேற்றிரவு கனவிற்கண்ட காக்ஷியை நினைக்குந்தோறும் ஆச்சரியமா யிருக்கின்றதே. ஆதனூர் பறைச்சேரியி லிருந்த நந்தனென்னும் பெயருடைய சிவபக்தரொருவர் கனகசபை திருநடனங்கண்டு யாகோற்பவ மாவதற்கு வந்திருக்கின்றாராம்.

அவரை நாமனைவருந்தேடி அழைத்துவந்து யாகாக்கினியில் ஸ்நானஞ்செய்து வைக்கவேணுமென்று பரமசிவம் எனது கனவில்வந்து அனுக்கிரகஞ் செய்தார்.

தீக்ஷதர்கள் வசனம்:—ஆம்! ஆம்! எமது கனவிலும் தங்களுக்குத் தெரிவித்தவிதமே எங்களுக்கும் தெரிவித்தார்.

அர்ச்சகர் வசனம்.—ஆனால் இதற்கெப்படி ஆலோசனை?

தீக்ஷதர் வசனம்.

ஆலோசனை யாவதென்ன? சிவாக்ஞைபின்படியே நந்தனாரைத் தேடி யழைத்துவந்து யாகாக்னி ஸ்நானஞ்செய்து வைப்பதுதான் நமது கடமை.

அர்ச்சகர் வசனம்:—சரி, அவ்விதமே நந்தனாரைத் தேடி அழைத்து வருவோம், புறப்படுவீர்கள்.

[தீக்ஷதர் நந்தனாரைத் தேடிக்கொண்டு வருவது.]

தீக்ஷதர் தரு.

இராகம் (எங்கேகண்டு தேடுவேன் கோவிலையான்) என்ற மெட்டு.

பல்லவி

எங்கேகண்டு தேடுவோம் நந்தனாரை
எங்கேகண்டு தேடுவோம்

அநுபல்லவி.

சங்கரன் திருவடி சந்ததம் துதித்திடும்
மங்காத கீர்த்திமிகும் நந்தனாரை எங்

சரணங்கள்.

புலையர் குலத்துதித்தும் பொன்னம்பலவாணனை
பூஜித்தானந்தமுறும் நந்தனாரை எங்

சிதம்பரந்தனிலுள்ள தெருவீதியெல்லாம்சுற்றி
சித்தமிகக்களைத்தோமே நந்தனாரை எங்

செந்தமிழானந்த கந்தசாமிக்கருள்
சந்த்ரஜடாதரனே பரமேஸ்வரா எங்

வசனம்.

அன்பர்காள்! அதோ பார்த்திரா? நேற்றிரவு நமது கனவில் பரமசிவம் சொன்னவிதமாகவே திண்டாத் திருமேனியார் திருவுருவந் துலங்கும்படியாக விளங்குகின்றார். அழைத்துவருவோம் வருவீர்கள்.

தீக்ஷதர் வசனம்.

சுவாமி! தாங்கள் தானே ஆதனூர் பறைச்சேரியில் பிறந்து நந்தனாரென்னும் பெயரமைந்து சைவசமயாசாரத்தை அனுஷ்டித்து

தம்மை அடிமைகொண்ட வேதியரிடத்தில் சிதம்பர நடராஜர் திரு நடனங்காணப் போகிறேனென்று செலவுபெற்றுக்கொண்டுவந்தவர்.

நந்தனார் வசனம்.

ஆம் சுவாமிகாள்! அடிமையின் பெயர்தான் நந்தன்.

தீக்ஷிதர் வசனம்.

சிவ! சிவ! சிவ! சிவ!! ஆனால் அடியார்களுடன் வருவீர்.

நந்தனார் வசனம்.

சுவாமிகாள்! என்ன காரணமோ? அனுக்கிரகம் புரிவீர்.

தீக்ஷிதர் வசனம்.

சுவாமி நந்தனாரே! தமது பக்திக்கு மெச்சி பரமசிவம் தங்களை கனகசபையி லழைத்து சென்று யாகாக்னியில் ஸ்நானஞ்செய்விக்கச் சொன்னார் வருவீர்.

நந்தனார் வசனம்.

மஹா பாக்யம்! சிவப்ரசாதம் தமது திருவாக்கின்படியே வருகிறேன் சுவாமி!

[தீக்ஷிதர் நந்தனாரை அழைத்துக்கொண்டு செல்வது.]

நந்தன் தரு

இராகம் (இனிப்பிறவி வருமோ) என்ற வர்னமெட்டு.

பல்லவி.

எனைத்தொடாதீ ரையரே விலகிவாரும்
எனைத்தொடாதீ ரையரே எனைத்

அநுபல்லவி.

வினைப்பயனால் பறையனுய்ப்பிறந்தேனெந்
தனைத்தொடாமல்வாரும் வேதியர்களே எனைத்

சரணங்கள்.

பொல்லாப்பறையனென்று பூலோகத்தோரிகழும்
புலையனும்யானல்லவோ வேதியர்களே எனை

அல்லல்துயரொழித்து ஆகமவேதம்படித்து
நல்லகுலத்துதித்தோரே வேதியர்களே எனை

செந்தமிழானந்த கந்தசாமிபதம்பாடி
நந்தனிதோவருகின்றேன் வேதியர்களே எனை

[சகலரும் சிதம்பர க்ஷேத்திரத்தின் நடராஜர் சந்நிதானத்திற்கு போகிறார்.]

4-வது—சீன்.



[இடம்—கனகசபை, நடேசர் சந்நிதானம்]
கதாநாயகர்:— அர்ச்சகர், தீக்ஷதர், நந்தனர்.

[நந்தனர் சிவத்யானமாய் பாடுவது]

நந்தனர் தரு.

இராகம்-பியாகு, தாளம்-ஆதி

பல்லவி

கண்டேன்கவி தீர்ந்தேன்—பவக்
கடல்கரை யேறிவந்தேன் கண்

சரணங்கள்

ஜோதிமறைமுடிவில் துலங்கிடுமீசன்
பாதம்பணிவிடைசெய் பாக்கியம்பெறுமும்மைக் கண்

எல்லையைக்காணுமுன்னே இருள்விலகுமுங்கள்
சொல்லைக்கேட்குமுன்னே துன்பங்கள்தீர்ந்திடும் கண்

கள்ளங்கருகச்செய்யும் கண்ணுதலேயுங்கள்
உள்ளங்குடிகொண்ட நடேஸர்திருநடனங் கண்

வசனம்

நமப்பார்வதிபதே அரஹர மஹாதேவா!

சுவாமிகாள்! தமது திருவருளால் கனகசபையில் திருநடனமாடி சிவபத்தர்கட்குக் காக்ஷி தந்தருளும் நடராஜர் திருவடி தரிசனங்கண்டு நேந்திரானந்த மடைந்தேன். சிவ! சிவ! சிவ! சிவ! சிவா!

[தீக்ஷதர்கள் யாகசாலை ஏற்படுத்தி வேத மந்திர பூர்வகமாய் அக்கினியை வளர்த்தி, நந்தனரை ஸ்நானபான நேமநிஷ்டை புரியச்செய்து அழைத்துவந்து யாகாக்னியின்முன் நிற்கச் செய்தவுடனே நந்தனர் யாக குண்டத்தைச் சுற்றி வருவது.]

நந்தனர் தேவாரம்

வேதவேதபொற் பாதனேசுடர்
வேள்வி நாயகஞானமே
நீதனேகௌரி பாகனேபிரக்
யாதனே யன்பர்நேயனே
பூதலந்தனின்மாய் கையற்றுயான்
புனிதனகவே நின்திருப்
பாதமேதுணை யென்றுநம்பினேன்
பக்தரக்ஷக யீசனே.

[நந்தனர் யாகாக்னியைச் சுற்றிவந்து சிவத் தியானமாய் அக்கினியில் மூழ்கி எழுந்தவுடனே பழைமையாயிருந்த சரீரம் பஸ்பமாகிபுதிய தேஜோன்ய பிரகாச ரூபத்துடன் விபூதி, ருத்திராக்ஷம் பூனூல்முதலானவையுடன விளங்கி சிவத்யானமாய் பாடுவது.]

நந்தனர் தரு

இராகம்-பந்துவராளி, தாளம்-ரூபகம்

பல்லவி

குஞ்சிதபாதத்தைத் தாரும்—மன
சஞ்சலபாவத்தைத் தீரும்

அநுபல்லவி

செஞ்சிலம்பசையக் கனகசபைதனில்
ஜெணுதத்தக ஜெணுதித்திமி
திமிதித்தோ மென்றாடிய குஞ்சித

சரணங்கள்

நெஞ்சின்கவலையை யாற்றும்—இந்த
வஞ்சப்பிறவியை மாற்றும்—நாளும்
வஞ்சிசிவகாமி வல்லிமகிழ்ந்திட

தஜ்ஜேம் தகஜெம் தரிகிட
தக்கிட தோமென் றுடிய குஞ்சித

சரணமென்றிங்கேநான் வந்தேன்—ஜனன
மரணத்திணுல்மிக நொந்தேன்—அந்தக்
காரணக்கல்மிஷங்கள் போக்கியேகநத்திடும்

இந்திரர் வானவர் மாமுனி
வந்துநிதந் துதி செய்திடும் குஞ்சித

பாலகிருஷ்ணன்தொழும் பாதா—முத்தி
நால்வர்க்குதவிய நாதா—எந்தன்
மேலேகிருபைசெய்து வெற்றியளித்திடும்

அத்தனே கர்த்தனே சுத்தனே
இத்தனை நிர்த்தனஞ் செய்திடும் குஞ்சித

வசனம்

சிவா சிவா பரமேஸ்வரா! பக்தரக்ஷகா. உமது திருவடி தரிசனங்கண்டு மன மிக மகிழ்ந்தேன் பரமசிவமே.

[நந்தனுர் சிவபெருமான் நடனத்தை
சகலருக்கும் தெரிவிப்பது.]

நந்தனுர் தரு

மாயாமாளவகௌளம், திஸ்ரம தாளம்

பல்லவி

நடன மாடினுர்—ஐயன்
நடன மாடினுர்

அநுபல்லவி

நடனமாடினுர் தில்லை
நாயகன் பொன்னம்பலந்தனில நடன

சரணங்கள்

முத்திமடந்தை சித்திக்க சித்திக்க
மோகவலைகள் பத்திக்க பத்திக்க
பக்தர்கள்மனது தித்திக்க தித்திக்க
பாதச்சிலம்பு சத்திக்க சத்திக்க

பனிமதிசடையாட பதஞ்சலிமாமுனி மறைபாட
பண்ணவர்கள் கொண்டாட பாலகிருஷ்ணன் மத்தளம்போட நடன

நந்தனார் தேவாரம்.

ஆன்மகோடிக ளெந்நாளும்
அன்புடன் துதித்திரைஞ்சும்
மான்மழு கரத்திலேந்தி
மஹான்களால் துதிக்குமீசா
வான்புவி யுள்ளோர்க்கெல்லாம்
வரந்தந்து காக்குமுன்னை
நான்துதித்திட வெந்நாளும்
நல்வழியருள் செய்தீரே.

தொல்புவிதனில் பிறந்து
துலங்குமுன் னருளினாலே
கல்வியா னந்தமாக
கவலையை யகற்றிநானென்
அல்லல் துன்பந்தவிர்த்து
அரஹரா சிவனேயென்று
நல்வழி யனுகுதற்கு
நாதனே அருள்செய்வீரே. 2

உமதருட் கிருபையாலே
ஊழ்வினை யகற்றியானும்
எமபாதை யில்லாமற்றான்
எந்தையே கைலைவாசா
நமசிவாயா வென்றேத்தி
நாடோறுந் துதிக்கச்செய்து
தமதருள் பெறுவதற்கு
தயாபரா அருள்செய்தீரே. 3

உம்பர்கள் துதித்திறைஞ்சும்
உமா மயேஸ்வரனே ஈசா
அம்புவி தனில்வசிக்கும்
அன்பர்கட் கருள்செய்தென்றும்
வம்பணுகாமல் காக்கும்
மயேஸ்வரா கைலைவாழ்வே
நம்பின யெந்தனுக்கு
நல்வழி யருள் செய்தீரே. 4

அந்தரத் த... ...றும்
ஆதிபே...ந்தா போற்றி
சந்ததம் ஞா...மார்க்கம்
தந்தரு... சிவமேபோற்றி
கந்தசாமிக் க...ள்செய்
காருண்ய சிவமேபோற்றி
நந்தனு மெந்தனுக்கு
நல்வழி யருள்செய்தீரே.

வசனம்.

நமப் பார்வதி பதே! அர ஹர மஹா தேவா.

திருச்சிற்றம்பலம்.



மங்களம் தரு

இராகம்-சுருட்டி, அடதாளம்.

பல்லவி.

மங்களம் மங்களம் நித்தியசுப
மங்களம் மங்களம்

அநுபல்லவி.

எங்கும் நிரமா யெள்ளுக்கு ளெண்ணெயோல்
தங்கி யிருக்கும் கணேசருக்கும்
திங்களை சடைதனில் தரித்த சிவன்பெற்ற
திருமுருகனுக்கும் தெய்வானை வள்ளிக்கும் மங்களம்

... வனு ... க்கும்
மலரயன் ராணி சரஸ்வதிக்கும்
சீல குணமுள்ள தேவாதி தேவர்க்கு...
சித்தர் ரிஷிகள்முனி தபசிகட்கும் ஜெய மங்கள...

வித்யா விவேகி கட்கும் விளங்கும் கவிஞர் கட்கும்
சத்ய நெறி தவரு ஞானிகட்கும்
நித்யா னந்தமாக நீணிலந் தனில் வாழும்
நிருபர் மாமறையோர்க்கும் நீதிசம்பன்னருக்கும் ஜெயமங்க...

அந்தண ராதியர்க்கும் ஆலய அர்ச்சகர்க்கும்
சிந்தைமகிழ் தில்லைமூவா யிரவர்கட்கும்
நந்தனருக்கும் தீக்ஷதர்கட்கும் செந்தமிழ்
சந்ததமும்பாடும் கந்தசாமிக்கும் ஜெய மங்களம் மங்க...

வாழி விருத்தம்.

அந்தரத்தமரர் வாழி அன்பர்கள் சிறந்து வாழி
சந்த்ர சூரியரும் வாழி தரணியிலுள்ளோர் வாழி
நந்தனர் சரித்திரத்தை நலமுடன் படித்தோர் கேட்டோர்
சிந்தையும் மிக மகிழ்ந்து செழிப்புடன் வாழி வாழி.

நந்தனர் சரித்திரம்

ச ம் பூ ர் ண ம்.

97886

முராஹரி பிரஸ்,
MADRAS